இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 399
சனி, 11 யூலை, 2026 |
பக்கங்கள் 18
www.ilakku.org















# செம்மணி இனப்படுகொலைச் சாட்சியங்களை தமிழக சட்டசபையில் முன்வைக்க முதலமைச்சர் தீர்மானம்: கஜேந்திரகுமார் கருத்து



செம்மணி அவலத்தின் இனப்படுகொலை சாட்சியங்களை தமிழக சட்டசபையில் முன்வைக்க மாநில முதலமைச்சர் விஜய் தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். அண்மையில் தமிழகத்துக்கு மேற்கொண்ட அரசியல் ரீதியான விஜயத்தில் தமிழக முதலமைச்சரை சந்தித்தமை குறித்து தனியார் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இதனைக் கூறினார்.

மேலும் செம்மணி போன்ற இனப்படுகொலை சாட்சியங்களை சர்வதேசத்துக்கு கொண்டு செல்லும் நகர்வில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் மிக்கது என்றும் அவர் விளக்கியிருந்தார். அத்துடன் செம்மணி சாட்சியங்களை மன்னார் மனித புதைகுழி போல மூடி மறைக்க அனுமதிக்கக்கூடாது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர் விடயத்தில் தமிழகம் சிறந்த பக்க பலமாக இருக்கும் என்ற சமிக்ஞை தற்போது தென்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன்ஈழத் தமிழர் விடயத்தில் தமிழகம் தங்களின் பக்கம் செயல்படுமாயின் அது சிறந்த பாதுகாப்பாக அமையும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

## நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பழிவாங்கல் குறித்து ஐ.நா. கவலை



இலங்கையின் நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற பார தூரமான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் பிற சிறைச்சாலைகளில் கைதிகள் மீது சிறைக்காவலர்களால் நடத்தப்பட்ட தாகக் கூறப்படும் பழிவாங்கும் தாக்குதல்கள் குறித்து ஐ.நா மனித உரிமைகள் அலுவலகம் தனது கடுமையான கவலையையும் அதிர்ச்சியையும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் அலுவலகத்தின் ஊடகப் பேச்சாளர் ரவினா ஷாம்தாசனி விடுத்துள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில், இந்த வன்முறைகளில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் குடும்பங்களுக்கு உண்மை என்னவென்று தெரியவர வேண்டும் என்றும், இதற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்

தொடர்ச்சி: பக்கம் 15

## பலாலி இராணுவ வைத்தியசாலை அமைந்துள்ள காணியை விடுவிக்க முடியாது: பாதுகாப்பு அமைச்சு



பலாலி இராணுவ வைத்தியசாலை அமைந்துள்ள காணியை இராணுவ பராமரிப்பில் இருந்து விடுவிக்க முடியாது என்று பாதுகாப்பு அமைச்சு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

பலாலி பகுதி அதி அவதானமிக்க பாதுகாப்பு வலயமாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளதால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து பாராளுமன்ற அமர்வில் கருத்து வெளியிட்ட அவர், இந்த வலயத்துக்குள் உள்ள 1661 ஏக்கர் காணியை சட்டத்தின் பிரகாரம் இராணுவத்துக்கு உரித்தாக்குவதற்கும், காணி உரிமையாளர்களுக்கு காணி அமைச்சின் ஊடாக இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பொதுமக்கற் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புக்கு அவசியமற்ற காணிகள்

தொடர்ச்சி: பக்கம் 13

# கமேனியின் அஞ்சலி நிகழ்வில் 35 மில்லியன் மக்கள் பங்கேற்பு



ஈரானின் மிகப்புனிதமான இடமான இமாம் ரெசா ஆலயத்தில் இறுதி அடக்கம் செய்வதற்காக, கமேனியின் உடல் அவரது சொந்த ஊரான மஷ்ஹத்தை கடந்த வியாழக்கிழமை(9) வந்தடைந்தது. கமேனியின் உடல் ஈராக்கிற்குள் நுழைந்தது, அங்கு கூடியிருந்த கூட்டத்தின் அளவு பிரமிக்க வைப்பதாக இருந்தது.

ஒரு லாரியில் உடல் கொண்டு செல்லப்பட்டபோது, ஆயிரக்கணக்கானோர் புனித நகரமான நஜாஃப் வழியாக ஊர்வலமாகச் சென்று, "அமெரிக்காவுக்கு மரணம்" மற்றும் "இஸ்ரேலுக்கு மரணம்" என்று முழக்கமிட்டனர்.

ஈராக் பிரதமர் அலி அல்-ஜைதி அதிகாரப்பூர்வ விமான நிலைய வரவேற்பை முன்னின்று நடத்தினார், அவருடன் ஜனாதிபதி பெஷெஷ்கியன் மற்றும் ஐ.ஆர்.ஜி.சி தளபதிகளும் ஊர்வலத்தில் இணைந்தனர். ஈரான் ஆதரவு பெற்ற ஈராக்கிய போராளிக் குழுக்களின் பதாகைகள் இரு நாடுகளின் கொடிகளுடன் பறந்தன. நஜாஃப் மற்றும் கர்பலா இடையே நடைபெற்ற இறுதி ஊர்வலங்களில் 50 முதல் 70 லட்சம் வரையிலான மக்கள் பங்கேற்றதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளையில், ஈரானுக்கு வெளியே உள்ள அதன் வான் பாதுகாப்பு அமைப்புகள் மீது அமெரிக்கா தாக்குதல்களை நடத்தியுள்ளது. ஆறு நாட்கள் நடைபெற்ற இறுதி ஊர்வலமானது தெஹ்ரான், கோம், நஜாஃப் மற்றும் கர்பலா ஆகிய நகரங்களைக் கடந்து, இறுதியாக அடக்கம் செய்வதற்காக மீண்டும் ஈரானை வந்தடைந்தது. இறுதி நிகழ்வில் 1.5 கோடி (15 மில்லியன்) பேர் வரை பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ச்சி: பக்கம் 13

## சீக்கிய ஆர்வலர் படுகொலை: இந்தியக் குற்றக் கும்பல் தலைவன் மீது அமெரிக்காவில் வழக்குப் பதிவு




கனடாவில் ஒரு முக்கிய சீக்கியத் தலைவர் அரசியல் ரீதியாகப் படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில், இந்தியக் குற்றவியல் கும்பல் ஒன்றின் தலைவர் மீது அமெரிக்க அதிகாரிகள் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்துள்ளனர்; இந்தப் படுகொலை கனடா (ஒட்டாவா) மற்றும் இந்தியா (புது தில்லி) இடையிலான உறவில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது.

கடத்தல், சட்டவிரோதக் கும்பல் நடவடிக்கைகள், மிரட்டிப் பணம் பறித்தல், துப்பாக்கி வர்த்தகம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் கொலை ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூன்று இந்திய சர்வதேசக் குற்றக் கும்பல்களைச் சேர்ந்த 37 பேர் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில், அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பா முழுவதும் உள்ள அமைப்புகள் இணைந்து மேற்கொண்ட மிகப்பெரிய சட்ட அமலாக்க நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தக் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று கலிபோர்னியாவின் மத்திய மாவட்டத்திற்கான அமெரிக்க வழக்கறிஞர் பில் எஸ்ஸாலி செவ்வாய்க்கிழமை செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

லாஸ் ஏஞ்சல்ஸ் காவல் துறை, எஃப்.பி.ஐ (FBI) மற்றும் ராயல் கனடிய மவுண்டட் போலீஸ் (RCMP) ஆகியவற்றின் அதிகாரிகளுடன் இணைந்து அவர் பேசினார். அமெரிக்காவில் ஏழு பேரும், இந்தியாவில் இருவர் மற்றும் ஐரோப்பாவில் ஒருவர் என மொத்தம் பத்து தலைமறைவுக் குற்றவாளிகளை அதிகாரிகள் இன்னும் தேடி வருகின்றனர்.

இந்தக் கும்பல்கள் "கலிபோர்னியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள இந்தியச் சமூகத்தினரிடையே வன்முறை, அச்சம் மற்றும் நிலையற்ற தன்மையை உருவாக்கியுள்ளன" என்று எஃப்.பி.ஐ-யின் லாஸ் ஏஞ்சல்ஸ் அலுவலகப் பொறுப்பு உதவி இயக்குநர்

தொடர்ச்சி: பக்கம் 16

## ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் மீது 1.4 ட்ரில்லியன் டொலர் அபராதம்




இளம் பயனர்களை அடிமையாக்கும் வகையில் ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் செயலிகளை மெட்டா நிறுவனம் வடிவமைத்ததாக நான்கு அமெரிக்க மாநிலங்கள் குற்றம் சாட்டிய தைத் தொடர்ந்து, அந்நிறுவனம் 1.4 டிரில்லியன் டொலர் வரை அபராதத்தை எதிர்கொள்ளக் கூடும் என நீதிமன்ற ஆவணங்களை மேற்கோள்காட்டி ஊடகங்கள் கடந்த வியாழக்கிழமை(9) செய்தி வெளியிட்டுள்ளன. விதிக்கப்படக்கூடிய இந்த அபராதத் தொகையானது, அந்நிறுவனத்தின் தற்போதைய சந்தை மதிப்பான சுமார் 1.5 டிரில்லியன் டொலருக்கு ஏறக்குறைய சமமாகும்.

குழந்தைகளையும் பதின்வயதினரையும் அடிமையாக்கி வைத்திருக்கும் அதே வேளையில், செயலிகளின் பாதுகாப்பு குறித்து பொதுமக்களைத் தவறாக வழிநடத்தி,

தொடர்ச்சி: பக்கம் 13

## உலகின் பொருளாதார வளர்ச்சி முன்னறிவிப்பு இரண்டாவது முறையாகக் குறைப்பு




ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் மோதலால் ஏற்பட்ட எரிசக்தி விநியோகப் பாதிப்பின் "நீடித்த விளைவுகளை" சுட்டிக் காட்டி, சர்வதேச நாணய நிதியம் (IMF) தனது 2026-ஆம் ஆண்டிற்கான உலகளாவிய வளர்ச்சி முன்னறிவிப்பை இந்த ஆண்டில் இரண்டாவது முறையாகக் குறைத்துள்ளது.

புதன்கிழமை(8) வெளியிடப்பட்ட தனது சமீபத்திய அறிக்கையில், 2026-இல் உலகப் பொருளாதாரம் 3 சதவீதம் வளரும் என்று IMF கணித்துள்ளது; இது ஏப்ரல் மாதத்தில் கணிக்கப்பட்ட 3.1 சதவீதத்தை விடக் குறைவு. செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த தேவை யால் இந்தச் சரிவு ஓரளவு ஈடுசெய்யப்பட்டாலும், இது ஒரு "மிதமான மந்தநிலை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2027-இல் வளர்ச்சி மீண்டும் 3.4 சதவீதமாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது;

தொடர்ச்சி: பக்கம் 13

# வலி. வடக்கு பகுதிகளில் தொடரும் போராட்டம்!



வலி.வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி, காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் "கொமோண்டோ" பங்களா முன்பாக வெள்ளிக் கிழமை (10) 12ஆவது வாரமாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலி. வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள், கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத காலப் பகுதிகளில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயங்களாக காணப்படுகின்றன.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்புத் தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயங்களாகவே காணப் படுகின்றன.

இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு பிரதி வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், இன்றைய தினம் வெள்ளிக்கிழமையும் 12ஆவது வாரமாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# பசறை - ஹொப்டனிலும் முகாமையாளர்கள் அராஜகம்

பதுளை - பசறை - ஹொப்டன் தோட்டப் பகுதியில் தரிசு நிலத்தில் முன்னாள் தொழிலாளி ஒருவரால் நடப்பட்ட பாக்கு மரங்கள், நூற்றுக்கும் அதிகமான தேயிலை செடிகள் மற்றும் தவறணையில் இருந்த 300 செடிகள் வெட்டி வீசப்பட்டுள்ளன.



சுமார் 10 வருடங்கள் முன்பாக நடப்பட்ட மரங்களே இவ் வாறு வெட்டி வீசப்பட்டுள்ளன. தோட்ட முகாமையாளர், உதவி முகாமையாளர் உள்ளிட்டோர் நேரடியாக இந்த அராஜகத்தை செய்துள்ளனர்.

அதேநேரம் இந்த சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டை ஏற்க லுணுகலை பொலிஸ் மறுத்துள்ளது. ஏற்கனவே மலையகத்தின் வெவ்வேறு பகுதிகளில் இவ்வாறான அராஜக சம்பவங்கள் பதிவாகி வரும் நிலையில் அதன் தொடர்ச்சியாக இந்த சம்பவமும் பதிவாகியுள்ளது.

### சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு ரவிகரன் நா.உ வலியுறுத்தினார்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் அதிகரித்துள்ள சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் பிரதி அமைச்சர் ரத்ன கமகே ஆகியோரிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் குறித்த சட்டவிரோத கடற்றொழில் செயற் பாடுகளைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு கடற்படை மற்றும் துறை சார்ந்த உரிய அதிகாரிகளுக்கு கடற்றொழில் அமைச்சரும் பிரதி அமைச்சரும் உடனடியாக உத்தரவிட்டுள்ளனர்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கடற் றொழில் அமைச்சுக்குரிய அலுவலகத்தில் நேற்று முந்தினம் (9) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன் போது மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் தலையங்கம் | 11 யூலை, 2026

# இறையாண்மை அதிகாரப் பகிர்வே அரசியல் முரண்பாடுகளில் நல்லிணக்கத்துக்கு ஒரே வழி

இன்றைய உலகில் ஆழத்தாக்கும் வான்வழி தன்னியக்க போர்க்கருவிகள் வழியாக நாடுகளின் பாதுகாப்புப் பலமும் அரசுக்களின் கூட்டாண்மை பங்காண்மைப் பொருளாதாரம் வழியாக அரசுக்களின் நிதிப்பலமும் உறுதிப்படுத்தப்படுகின்றன. இதனால் தாராண்மைவாத சனநாயகம் நாடுகளுக்கான சிறந்த ஆட்சித்தத்துவம் என்ற 20ம் நூற்றாண்டு அரசியல் மாறுபட்டுள்ளது. இதன் விளைவாக தேச அரசுக்கள் (Nation States) பொதுநன்மையை (Common Goods) மைய நோக்காகக் கொண்டு செயற்படுதலில் இருந்து அரசுக்கள் விடைபெற்று சக்தி அரசுக்களாக (Power States) அரசுக்கள் தங்களைக் கட்டமைப்பதையே தங்களின் மைய நோக்காகக் கொண்டு விளங்குகின்றன.

1989 இல் பேளின் சுவர் இடிக்கப்பட்டதுடன் அமெரிக்காவுக்கும் ரஸ்யாவுக்கும் இடையில் இருந்த பனிப்போர் முடிவடைந்து 1991 அளவில் அமெரிக்கா உலகின் அதிசக்தி (Super Power) நாடாக உலகில் மேலேழுந்தது. இந்த அரசியல் முனைவாக்கம் காரணமாக பிரித்தானியா போன்ற உலகின் முன்னைய வல்லரசுக்கள் கூட மத்திய சக்தி (Middle power) நாடுகளாக மாறத்தொடங்கின. இன்று நேற்றைய வல்லரசான பிரித்தானியா மீளவும் கனடா யப்பான் போன்ற மத்திய சக்தி நாடுகளுடன் இணைந்தே மீளவும் வல்லாண்மையாக மேலெழவேண்டும் என்கின்ற கருத்துப் பலமாக உள்ளது. இதனை எதற்காக எழுதுகிறேன் என்றால் மாறும் சூழ்நிலைக்கு ஏற்ப எவரும் தங்களை மாற்றியமைத்தே மீளவும் முன்னைய நிலைக்கு மீள முடியும் என்கிற அரசியல் எதார்த்தத்தை ஈழத்தமிழர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அரசற்ற தேசஇனமாகவுள்ள ஈழத்தமிழர்களால் அரசுக்களுடன் கூட்டாண்மை பங்காண்மைகளுக்குச் சென்று சமகால கூட்டாண்மை பங்காண்மை அரசியலை எதிர்கொள்ள இயலாது என்பதால் ஈழத்தமிழர்களின் தொப்புள்கொடி உறவாக உள்ள தமிழகத் தமிழர்களின் அரசியல் தலைவர்களின் கூட்டாண்மை பங்காண்மை வழியாகவே இன்றைய உலகின் கூட்டாண்மை பங்காண்மை அரசியலில் நுழைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இதுவே தமிழ் தேசிய மக்கள் பேரவையினர் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையில் தமிழக விடுதலைச் சிறுத்தைகளின் தமிழக சட்டசபை உறுப்பினர் அமைச்சர் வன்னியரசின் துணையுடன் தமிழக முதல்வர் யோசப் விஜயையும் பின்னர் தமிழக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினையும் மற்றைய தமிழக அரசியல் தலைவர்களையும் சந்தித்து சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஸ்டியை ஈழத்தமிழர்கள் பெற சிறிலங்காவுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுள்ளனர். இதனை இலக்கு சமகாலத்திற்கு ஏற்ற அணுகுமுறையெனக் கருதுகிறது. தமிழரசுக்கட்சியின் சிறிதரனும் இளைய தம்பி சிறிகாந்தும் கர்நாடக மாநில காங்கிரஸ் சட்டசபை உறுப்பினரைச் சந்தித்துள்ளனர். இந்தியாவின் மற்றைய தென்னிந்திய மாநிலங்களையும் மட்டுமல்ல வடமாநிலங்களையும் சந்தித்து ஈழத்தமிழர் தேசிய பிரச்சினைக்கு இந்தியாவின் இன்றைய நிலைப்பாட்டைத் தெளிவாக்க வேண்டிய நேரமிது என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

மேலும் அமெரிக்கா உலகின் அதிசக்தி படைத்த நாடாக எழுந்த 1991 காலகட்டத்தில்தான் 1991ம் ஆண்டின் இராணுவத் தந்திரோபாய அறிக்கை இலங்கைத் தீவில் இருநாடுகள் என்ற நிலை காணப்படுகிறது. ஒன்று சிறிலங்கா மற்றது தமிழீழம். கொழும்பு இதனை ஏற்குமா அல்லது ஒடுக்குமா? என்ற கேள்வியை எழுப்பியிருந்தது. சிறிலங்கா இந்தக் கேள்வியின் பொருளைப் புரிந்து கொண்டு அமெரிக்க நலன்பேணும் அரசாகத் தன்னை முன்னிலைப்படுத்தி அமெரிக்காவை ஈழத்தமிழரின் மண்மீட்புப் போருக்குத் தலைமைதாங்கிய தமிழீழ விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் எனப்பட்டியலிட வைத்து தனது ஈழத்தமிழின அழிப்பை சிறிலங்காவின் இறைமையையும் ஒருமைப் பாட்டையும் பாதுகாக்கும் தேசிய பாதுகாப்பு நடவடிக்கையென உலகின் முன் தனது வல்லாண்மை மேலாண்மை நாடுகளுடனான நட்பின் மூலம் நிறுவிக்கொண்டது. இதுவே இன்று வரை ஈழத்தமிழர்களால் ஈழத்தமிழர்களுக்குச் சாதகமான எதனையும் அனைத்துலக மட்டத்தில் முன்னெடுப்பதற்கான பெருந்தடையாகவுள்ளது. எனவே இந்நிலையில் தமிழகத்தின் கூட்டாண்மை பங்காண்மை இந்நிலையை மாற்றுவதற்கான புதிய வழிகளைத் திறக்கும் என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

1945ம் ஆண்டு ஆகஸ்ட் 6ம் நாள் யப்பானின் கிரோஷிமா (Hiroshima) மேல் சின்னபையன் என்ற குறியீட்டுப் பெயர் கொண்ட ஐதரசன் அணுக்குண்டை வீசி 75000 முதல் 100000 வரையான யப்பானியர்களையும் மூன்று நாட்களுக்குப் பின்னர் யப்பானின் நாகசாகி (Nagasaki) மீது பருத்த பையன் என்ற ஐதரசன் அணுக்குண்டை வீசி மீளவும் பெரு மளவிலான யப்பானியர்களையும் தேசமாகவே கொன்று குவித்து 1941இல் ஹவாயின் பேள் காபரில் அமெரிக்கக் கப்பலை யப்பானியர் தற்கொடைத் தாக்குதல் மூலம் அமெரிக்கா மேலும் பிரித்தானியா மேலும் தொடங்கிய போரை முடித்து வைத்தது. 1945 மார்ச் மாதத்தில் யப்பானில் டோக்கியோ மீது குண்டு வீசி 83000 பேரைக் கொன்ற நிலையிலும் யப்பானியர் தொடர்ந்தும் உறுதியுடன் போராடிய நேரத்திலேயே கிரோஷிமா மீது அணுக்குண்டை வீசி மக்களைத் திரளாக குண்டு வீசி கொல்லும் போர் முறைமையையும் உட்கட்டுமானங்களை ஒரேயடியாக அழிக்கும் முறைமையையும் உலகில் அமெரிக்கா தோற்றுவித்தது. யப்பான் சரணடையும் பொழுது அதன் அரசராக இருந்த கிரோ கிட்டோ "எதிரி கொரூரமான குண்டுகளை போடத் தொடங்கி விட்டான். ஆகவே எதிர்கால தலைமுறைகளின் நலன் கருதி யப்பான் சரணடைய வேண்டும்." என கூறிச் சரணடைந்த போதிலும் எந்த அமெரிக்கா யப்பானை அழிக்க நினைத்ததோ அதே அமெரிக்காவின் துணையுடனேயே இன்று உலகின் மத்திய சக்தி நாடாகத் திகழ்கிறது. இதுதான் ராஜதந்திர வெற்றியென்பது.

சிறிலங்காவுக்கு ஈழத்தமிழர்களைத் தேசமாகவே 146000 பேரை முள்ளிவாய்க்காலில் மே 2009 இல் இனப் படுகொலை செய்வதற்கும் ஈழத்தமிழர்களின் உட்கட்டுமானங்களை அடியோடு அழிப்பதற்கும் அமெரிக்காவின் யப்பான் மேலான குண்டு வீச்சுச் செயல் முன்மாதிரியாகவும் அமைந்திருக்கலாம். இந்நிலையில் இன்று 17 ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்க பிரித்தானிய சுவிஸ் நோர்வே யேர்மனிய கூட்டு முயற்சிகள் வழி தேசிய மக்கள் சக்தியினர் கொண்டு வரவுள்ள புதிய அரசியலமைப்பில் ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு (Tamil National Question) சிறிலங்காவின் ஒற்றையாட்சியுள் அதிகாரபரவலாக்கத்தை ஏற்படுத்தித் தீர்வு காணவைக்க ஈழத்தமிழர்களே முயற்சிக்கின்றனர்.

இந்நிலையில் தமிழ் தேசிய மக்கள் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் "சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஸ்டி" என்கிற இறையாண்மைப் பரவலாக்கத்தை அதிகாரப் பரவலாக்கலுக்கு மாற்றுத் தீர்வாக முன்னெடுப்பது வரவேற்கப்பட வேண்டியவொன்று என்பது இலக்கின் எண்ணம்.

நோர்வேயின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்காவுக்கும் பேச்சுவார்த்தை நடந்த வேளையில் கனேடியக் கூட்டாட்சி நிபுணர்களுடன் நடாத்திய கலந்துரையாடலின் அடிப்படையில் பின்பு தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களும் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் சட்டமுனைவர் ஜி எல் பீரிஸ் அவர்களும் இணைந்து கீழ் கண்ட தீர்மானத்தை வரைந்தனர்.

"விடுதலைப்புலிகளின் தலைமை தெரிவித்த ஒரு யோசனைக்கு இசைவாக உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகத்தில் ஐக்கியமான இலங்கைக்குள் சமஸ்டி ஆட்சிமுறை தழுவிய தீர்வு ஒன்றை ஆராய்ந்து பார்ப்பதற்கு இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டது" என்பதே அந்தத் தீர்மானம்.

இவ்விடத்தில் இந்த முயற்சி சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டுக்குப் பாதகமானதில்லையென்பதை தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் விளக்கும் பொழுதே "இறையாண்மை அதிகாரப் பகிர்வே இந்த சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஸ்டி என்பதனைத் தெளிவுபடுத்தி இதுவரை சிங்கள அரசியல்வாதிகள் அதிகார பரவலாக் கத்தையே சமஸ்டியெனப் பேசியுள்ளனவே தவிர இறையாண்மை அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள சிந்திக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

எனவே இன்று இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் என்பது குறித்துப் பேசப்படுகின்ற நேரத்தில் பாலா அண்ணனின் வழியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் தமிழ் தேசிய மக்கள் பேரவையினர் முன் எடுக்கும் இந்த முயற்சிக்கு தமிழகத் தமிழர்களும் அனைத்துலகிலும் உள்ள புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்களும் துணைசெய்து சிறிலங்காவின் அரசத்தலைவர் அநுர குமர திசநாயக்காவுக்கு இறையாண்மை அதிகாரப் பகிர்வே அரசியல் முரண்பாடுகளில் நல்லிணக்கத்துக்கு ஒரே வழி என்பதனை உணர்ந்து அதனை நடைமுறைப்படுத்துமாறு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்பது இலக்கின் இவ்வார எண்ணம்.

**ஆசிரியர்**




சிறைச்சாலைகள் குற்றவாளிகளைத் திருத்தும் சீர்திருத்தக் கூடங்களா அல்லது மனித உயிர்களைப் பலிகொள்ளும் மரணப் பொறிகளா என்ற கேள்விகள் தற்போது நீர்கொழும்பு சிறைச்சாலையில்; அரங்கேறிய இரத்தக்களரியை அடுத்து வெகுவாக மேலெழுந்துள்ளன.
கடந்த ஜூலை 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் நீர்கொழும்பு சிறை வளாகத்திற்குள் வெடித்த வன்முறை, சாதாரண கைதிகள் மோதலாக ஆரம்பித்து, இறுதியில் 8 சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் 20 கைதிகள் உட்பட 28 பேரின் உயிர்களைப் பலிகொண்ட கொடூர வன்முறையாக முடிவடைந்துள்ளது.



27 வயதேயான சிறைச்சாலை அவசர நடவடிக்கை மற்றும் தந்திரோபாயப் படையின் அதிகாரி தர்ஷன தரங்க முதல், போதைப்பொருள் கடத்தல் வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 73வயதான இந்தியப் பிரஜை உன்னிகிருஷ்ணன் சுப்பிரமணியம் வரை இந்த வன்முறையில் சிக்கி மாண்டுபோயுள்ளனர்.

இச்சம்பவம் இலங்கையின் சிறைச்சாலை கட்டமைப்பு நீண்டகாலமாக எதிர்கொண்டு வரும் கட்டமைப்பு ரீதியான வீழ்ச்சியையும், சீர்திருத்தப்பட மறுக்கும் அதன் அவல நிலையையுமே அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டியுள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலையின் இந்த கோர சம்பவத்திற்குப் பின்னால் சிறைக்குள் தடையின்றி அரங்கேறும் போதைப்பொருள் வர்த்தகமும், கைதிகளிடையேயான குழு மோதல்களுமே பிரதான காரணங்களாக சுட்டிக்காட்டப்படுகின்றன.




சிறைக்குள் போதைப்பொருள் கடத்தப்படுவது குறித்த இரகசியத் தகவல் அதிகாரிகளுக்குக் கசிந்ததைத் தொடர்ந்தே, ‘கட்டுவெல்லேகம சுரேஷ்’ மற்றும் ‘ரொக்கி’ போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களின் பின்னணியைக் கொண்ட கைதிகள், தகவல் வழங்கியதாக சந்தேகிக்கப்படும் சக கைதிகள் மீது ஜூலை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தாக்குதலைத் தொடுத்துள்ளனர்.

சட்டவிரோத போதை மாத்திரைகளை உட்கொண்ட கைதிகளின் வன்முறைக் குணம், மறுநாள் காலை உணவின் போது சிறை அதிகாரிகளை இலக்கு வைக்கும் அளவிற்கு விஸ்வரூபம் எடுத்துள்ளது.

மறுநாளான ஜூலை 6ஆம் திகதி காலை சிறைச்சாலையின் பிரதான இரும்பு மற்றும் பலகைக் கதவுகளை உடைத்துக்கொண்டு கைதிகள் பெருமளவில் தப்பியோட முயன்றபோது, அங்கு பணியிலிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.



ஐந்து பேர் கொண்ட சட்ட மருத்துவ அதிகாரிகள் குழுவின் முதற்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கைகள், இந்த வன்முறையின் கொடூரத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளன. உயிரிழந்த கைதிகளில் 15பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களினாலும், ஏனைய கைதிகள் கடுமையான தாக்குதல்களினாலும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த சிறை அதிகாரிகள் அனைவரும் கைதிகளின் கொடூரமான தாக்குதலுக்கு உள்ளாகி, மண்டையோட்டுப் பகுதி சிதைந்து, மூளையில் ஏற்பட்ட கடுமையான இரத்தக் கசிவு காரணமாகவே உயிரிழந்துள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

டெங்கு நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும் அவசர கடமைக்காக வந்திருந்த அதிகாரி, கைதிகள் தப்பிச் செல்வதைத் தடுக்கத் துப்பாக்கிச் சூடு நடத்தியதால், தற்போது சிறைக்கு வெளியேயும் அவருக்குக் கொலை மிரட்டல்கள் விடுக்கப்படும் அளவிற்குக் கடுமையான அச்சுறுத்தல்கள் தற்போதும் நீளுகின்றன.




நீர்கொழும்பு வன்முறையைத் தொடர்ந்து, அங்கிருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் உட்பட சுமார் 1,200 கைதிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள வெலிக்கடை, பூஸா, அங்குணகொலபெலஸ்ஸ, தும்பறை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் போன்ற சிறைச்சாலைகளுக்கு அவசர அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், இந்த இடமாற்றமானது சிறைச்சாலை அதிகாரிகளின் பழிவாங்கும் படலமாக மாறியுள்ளதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. கைதிகள் பாதுகாப்புக்கான குழு மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியன, இடமாற்றம் செய்யப்பட்ட கைதிகள் புதிய சிறைகளில் கடுமையான சித்திரவதைகளுக்கும் அநாகரிகமான நடத்தைகளுக்கும் உள்ளாக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளன.

குறிப்பாக, கலவரத்தின் சூத்திரதாரியாகக் கருதப்

விதுரன்

படும் ‘கட்டுவெல்லேகம சுரேஷ்’ பூஸா சிறைக்கு மாற்றப்பட்ட பின்னர், அங்குள்ள சக கைதிகளால் அதிகாரிகளின் தூண்டுதலால் நடத்தப்பட்ட கடுமையான தாக்குதலில் எழுந்து நடமாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.




அதைவிடவும் வெலிக்கடை சிறைச்சாலையின் காவலில் இருந்தபோது இரு கைதிகள் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளதோடு இடமாற்றப்பட்ட கைதிகளில் பலர் படுகாயமடைந்த நிலையிலும் அவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் வேண்டுமென்றே தாமதப்படுத்தப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த வன்முறைக்கு எதிரான சட்டபூர்வ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதைத் தாண்டி, சிறைத்துறையினரின் கூட்டுப் பழிவாங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றதா என்ற பெருங்கேள்விகள் இவ்விடத்தில் எழாமில்லை.

நீர்கொழும்பு வன்முறை மற்றும் அதன் பின்னரான சித்திரவதைகள் குறித்து ஐ.நா.மனித உரிமைகள் அலுவலகத்தின் ஊடகப்பேச்சாளர் ரவினா ஷாம்தாசனி தனது கடுமையான கரிசனைகளை வெளியிட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உண்மை என்னவென்று தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும், சர்வதேச நெறிமுறைகளை மீறிய அதிகாரிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



இதேவேளை, இச்சம்பவம் குறித்து விசாரிக்க ஜூலை 7ஆம் திகதி இரவு வெலிக்கடை சிறைச்சாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அவசர விசாரணைப் பிரிவினருக்குச் சிறை அதிகாரிகள் அனுமதி மறுத்துள்ளனர்.

இந்த நடவடிக்கை 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தை அப்பட்டமாக மீறும் செயலாகும். சித்திரவதைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் நடப்பதாகத் தகவல் கிடைக்கும்

**தொடர்ச்சி: பக்கம் 13**




பா.அரியநேத்திரன்

அம்மணி சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் செம்மணி இனப்படுகொலை இடம்பெற்றது இன்று வரை 2026,யூலையில் 420, தமிழர்களின் எலும்புக்கூடுகள் சாட்சியங்களாக வெளிவருகிறது.

அதே சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில்தான் இலங்கை அரசின் புக்காரா விமானங்களின் இனப்படு கொலை வேட்டைகளில் ஒன்றுதான் நவாலி தேவாலயப் படுகொலை. 1995.யூலை,09,ல். நிகழ்த்தப்பட்ட அந்த இனப்படுகொலையின் 31, வது ஆண்டு நினைவுநாள் கடந்த 2026, யூலை,09, நாளாகும்.



யாழ் மாவட்டத்தின் தென்மேற்கே சண்டிலிப்பாய் பிரதேசத்தில் நவாலிக்கிராமம் உள்ளது. 1995, யூலை,07, ல் இராணுவத்தினர் “முன்னேறிப்பாய்தல்” என்ற பெயரில் ஒரு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர். மக்களை பாதுகாப்பாக ஆலயங்களில் இருக்குமாறு அறிவித்தார்கள்.

சங்கானை, சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி, தொட்டி லடி, சீரணிச்சந்தி, சுழிபுரம், சித்தன்கேணி, இளவாலை, பண்டத்தரிப்பு, நாவாலி, ஆகிய பத்து கிராமங்களை சேர்ந்த ஏற்ககுறைய 2500, தமிழ் மக்கள் நாவாலி சென் பீற்றஸ் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தனர். அந்த தேவாலயத்தை அண்டிய சின்ன கதிர்காமம் என அழைக்கப்படும் முருகன் ஆலயத்திலும், தஞ்சம் அடைந் திருந்தனர்.




நவாலி தேவாலயத்தின்மீதும் சுற்றுவட்டத்திலும் இலங்கை அரசின் ‘புக்காரா’ போர் விமானங்கள் மூலம் நடத்தப்பட்ட இந்த கொடூரத் தாக்குதலில், தேவாலயத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தஞ்சம் புகுந்திருந்த 153 வரையிலான அப்பாவித் தமிழ் பொதுமக்கள் சம்பவ இடத் திலேயே இனப்படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 150 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்களையும், கண்ணில் பட்ட சடலங்களையும் பொதுமக்கள் யாழ் போதனாவைத்தி யசாலைக்கு எடுத்துச்சென்றனர். மூன்று தினங்களாக உயிரிழந்தவர்களின் உடலங்கள் எடுக்கப்பட்டன 1995, யூலை,11, ம் திகதியும் அடையாளம் காணமுடியாத 25, உடலங்கள் மீட்கப்பட்டன. இனப்படுகொலையின் மிலேச்சத்தனமான இரத்தக்களரியாக நாவாலி ஊர் காட்சி தந்தது.

பாதுகாப்பான இடம் என நம்பி தேவாலயத்திற்குள் தஞ்சம் அடைந்த குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பெண்கள் உட்பட பலர் இந்த சம்பவத்தின் போது பரிதாபமாக உயிரிழந்தனர்.

அன்று 1995 யூலை மாதம் யாழ்ப்பாணம், நவாலி யிலுள்ள சென். பீற்றர்ஸ் மற்றும் போல் தேவாலயம், போரி லிருந்து பாதுகாக்கவும் அடைக்கலமும் தேடி இடம்பெயர்ந்து வந்த தமிழ் மக்களால் நிரம்பியிருந்தது. இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு உணவு மற்றும் தற்காலிக கழிப்பறைகளை அமைத்தல் உள்ளிட்ட உதவிகளை தேவாலயத்தின் இளை ஞர் கழகம் உள்ளிட்ட நவாலியிலுள்ள மக்கள் வழங்கிக் கொண்டிருந்தனர்.



அந்த நேரத்தில்த்தான் 1995,யூலை,09ஆம் திகதி, பிற்பகல் 4.30 , மணிதொடக்கம் 05.45, மணி வரை தேவாலயத் தைச் சூழவும், சின்ன கதிர்காமம் என அழைக்கப்படும் ஸ்ரீ கதிர்காம முருகன் இந்து ஆலயம் மற்றும் அதன் அயற்புறங்களிலும் ‘புக்காரா’ விமானத்திலிருந்து 13 குண்டு கள் வீசப்பட்டன. அன்றைய தினம் குடாநாட்டின் பல்வேறு வீதிகளினூடாக அகதிகளாக வெளியேறிய மக்கள் நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி சின்னக்கதிர்காமம் முருகன் கோயிலிலும் தாகம் தீர்ப்பதற்காக அமர்ந்து களைப்பாறினர்.




யாழ். நகரப் பகுதியில் இருந்து அராலி நோக்கி வந்து கொண்டிருந்த புக்காராவிமானம் தொடர்ச்சியாக மிலேச்சத்தனமாக 13 குண்டுகளை இரு ஆலயங்கள் மீதும் வீசியது. ஆலயமும் தேவாலயமும் இத்தாக்குதலில் பலத்த சேதமடைந்தன.

இதில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் காயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களுள் 04 வயது குழந்தை உட்பட மற்றும் முதியவர், பெண்கள், இளைஞர்ககள் என பலர் அடங்குவர். இதன்போது இடம்பெயர்ந்த மக்களுக்காகவும் தொண்டர்களான இளை ஞர்களுக்காகவும் சமையலில் ஈடுபட்டிருந்த அப்பகுதி கிராம சேவையாளரும் கொல்லப்பட்டவர்களுள் அடங்குவார்.



கொல்லப்பட்டவர்களுள் அண்ணளவாக 45 பேர் நவாலி பகுதியைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் பக்கத்து கிராமங்களில் இருந்து அடைக்கலம் தேடி இடம்பெயர்ந்து நவாலிக்கு வருகை தந்தவர்களாவர். அன்றைய தினம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 13 பேர் கொல்லப்பட்டனர். ஒரு சிறுவனின் உடல் கண்டுபிடிக்கப்படவேயில்லை. தான் வீடு சென்றுபார்த்தபோது தனது 18 வயதான மகளின் சடலத்தின் கீழ் தனது உறவினரின் குழந்தை ஒன்றை உயிருடன் கண்டெடுத்தது எப்படி என்பதை பெண்ணொருவர் விபரித்தார். சில சடலங்கள் சில நாட்களின் பின்னரே மீட்கப்பட்டன. தலைகளற்ற சடலங்கள் நிலமெங்கும் பரந்து கிடந்தன. சில உடல்களின் தலைகள் மரத்தின் மீதிருந்து கண்டெடுக்கப்பட்டன. பல உடல்கள் அடையாளம் காணமு டியாதபடி கருகியிருந்தன. அன்றைய தினம் மாலை தான் யாழ்ப்பாணத்திலிருந்து நவாலி நோக்கி சைக்கிளில் பயணித்தபோது, சடலங்களும் அவற்றின் பாகங்களும் வீதியெங்கும் சிதறிக்கிடந்ததாக கத்தோலிக்க பாதிரியார் ஒருவர் விபரித்தார்.



ஆரம்பத்தில் யாழ்ப்பாண கத்தோலிக்க பேராயர் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ஐ.சி.ஆர்.சி) ஆகியோரை மேற்கோள்காட்டி இக்குண்டுத்தாக்குதலில் 157, பேர் வரை கொல்லப்பட்டனர் , காயம் அடைந்தவர்கள் 150க்கு மேல் என்றும் அப்போது கூறப்பட்டது. இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இடம் பெயர்ந்தவர்கள் என்பதாலும் காயமடைந்த பலர் பின்னர் உயிரிழந்ததாலும் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் சரியான எண்ணிக்கையை உறுதிப்படுத்துவது கடினமாகும்.

தொடர்ச்சி: பக்கம் 13




நீர்கொழும்பு சிறைச்சாலை விவகாரம் இன்று சர்வதேச அளவில் பேசப்படுகிற ஒரு விடயமாக மாறியிருக்கிறது. இலங்கை சிறைச்சாலை அமைப்பில் விரிவான சீர்திருத் தங்கள் அவசியம் தேவை என இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் - அன்ரே பிரஞ்ச் வலியுறுத்தி கூறியிருந்தார்.




“நீர்கொழும்பு சிறைச்சாலை விவகாரத்தை எதிர்க்கட்சியினர் குறுகிய நோக்கோடு தமது அரசியல் இலாபத்துக்காக கையாள்வதாக” சபை முதல்வரும் அமைச் சருமான பிமல் ரத்நாயக்கா தெரிவித்திருந்தார்.

தற்போது அரசாங்கத்தினால் போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தலுக்கு எதிராக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கடுமையான நடவடிக்கைகளின் காரணமாக, அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் நோக்கிலேயே இது போன்ற சம்பவங்கள் அரங்கேற்றப்படுவதாகவும் கருத்துகள் வெளியாகி இருந்தன.




சரி, இந்த விடயம் குறித்து மக்கள் எவ்வாறு பேசுகின்றனர் என்று நோக்குவோமானால், தமிழ் மக்கள் யூலை கலவரத்தில் சிறைச்சாலையில் பட்ட துயரத்தை நினைவில் கொண்டும் குட்டிமணி, தங்கதுரை போன்றவர் களுக்கு இழைக்கப்பட்ட கொடூரமான மனிதவதைக்கான நினைவுபடுத்தல் என்று நீர்த்துப்போகாத தமது வேத னையை வெளிப்படுத்தியுள்ளனர்.

மறுபக்கம் சிறைச்சாலை கட்டமைப்பு தொடர்பான விமர்சனமாகவும் கருத்துகளைக் கூறிவருகின்றனர். சிறைச் சாலையில் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளனர். நூறுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படாடுள்ளனர். யாவை யும் தாண்டி, இது போதைப்பொருள் தொடர்பில் உருவான ஒரு பிரச்சினை என்பதும் யாவரும் அறிந்த உண்மையே.



இன்னும் பதற்றம் தீராமல் இருக்கும் நீர்கொழும்பு சிறைச்சாலையானது, அதன் கொள்ளளவுக்கு மீறிய அளவில் கைதிகளைக் கொண்டிருந்தது எனவும் அதன் காரணமாகவே கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு நிலைமை மோசமடைந்தது எனவும் கூறப்படுகிறது. தற்போது இங் கிருந்த சிறைக்கைதிகள் பலரும் வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு, நீர் கொழும்பு சிறைச்சாலை வளாகமானது, ஒரு குற்றப் பிரதேசமாக கருதப்படுவதாக தெரிவித்துள்ளது. தற் போது இயங்கி வரும் ஏனைய சிறைச்சாலைகளின் நெருக்கடி நிலைமை, மற்றும் நலன்புரிச் சேவைகளைக் கருத்தில் கொண்டு, தற்காலிக சிறைக்கொட்டகைகளை அமைத்து கைதிகளை அங்கு மாற்றுவது தொடர்பில் கருத்து வெளியாகியுள்ளது. மஹமோதர மற்றும் பழைய போகம்பர ஆகிய இடங்களை சிறைச்சாலை கட்டளைசா சட்டத்தின் விதிகளுக்கு அமைய இவ்வாறு தற்காலிக சிறைக்கொட்டகைகளாக மாற்றவுள்ளதாகவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மனித உரிமை ஆணைக் குழுவும் தனது கருத்தினைத் தெரிவித்திருக்கிறது, அதாவது, பொறுப்புகூறல மற்றும் கைதிகளின் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு பணிப்புரை ஒன்றையும் விடுத்திருந்தது. இது போன்ற சம்பவங்கள் ஏனைய சிறைச்சாலைகளில் எதிர் காலத்தில் இடம்பெறக்கூடாது என்கிற ரீதியில், மற்றைய சிறைச்சாலையில் பதிவாகியுள்ள சம்பவங்கள் குறித்து தனது விசாரடைகளை ஆரம்பித்துள்ளது.



மனித உரிமை ஆணைக்குழுவின் பணியாளர்கள் அனைத்து சிறைச்சாலைகளுக்கும் தடையின்றி செல்வதை உறுதிப்படுத்துதல், சிறைக்கைதிகளைப் பழி வாங்கும் நடவடிக்கையில் இருந்து பாதுகாத்தல், தொடர்புடைய அனைத்து சான்றுகளையும் பாதுகாத்தல் மற்றும் பக்கசார் பற்ற விசாரணை என்பனவே வழங்கப்பட்டுள்ள பணிப் புரையாகும்.

1996ம் ஆண்டின் 21மா இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் கீழ், இந்த பணிப்புரை கள் விடுக்கம்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பி னர் நளின் பண்டாரநாயக்கா ஒரு விடயத்தை தெரிவித் துள்ளார். அதாவது, நீர்கொழும்பு சிறைச்சாலையில் தற்போது ஏற்பட்டுள்ள வன்முறைகள், மரணங்கள் மற்றும் காயங்களுக்கு தற்போதைய அரசாங்கமும் நீதி அமைச்சரும் முற்றுமுழுதாக பொறுப்பேற்க வேண்டும் என கூறியிருக்கிறார். அதோடு, இதுவரை நீதியமைச்சர் சிறைச்சாலைகளைப் பார்வையிடவில்லை எனவும் முறையான சிறைக்கட்டமைப்புக்கான ஆலோசனையை வழங்கவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கம், ஒவ்வொரு பொது நிறுவனத்தையும்

தொடர்ச்சி: பக்கம் 14




*** யாழ் ஆயர் நியமனம்: அரசாங்கத்துடன் பேசியது ஏன்? அரசியல் தலையீட்டை வத்திக்கான் அனுமதித்ததா?**
*** செம்மணியில் சிங்களவர்களும் புதைக்கப்பட்டதாக ஆயர் ஜஸ்ரின் மாநாட்டில் கூறியதன் நோக்கம் என்ன?**
*** உண்மையை அறிந்த பின்னர், கடந்த காலத்தில், ஆயர், கர்தினால் நியமனங்களை இரத்துச் செய்த வத்திக்கான் !**

அ.நிக்ஸன் பத்திரிகையாளர்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணைப் பேராயர் அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம், யாழ்ப்பாணத்தில் பிறந்து, சென் பற்றிக்ஸ் கல்லூரியிலும் யாழ் பல்கலைக்கழகத்திலும் தனது உயர் கல்வியை நிறைவு செய்தவர் என்பதை எவரும் மறுக்க முடியாது.

அவரது உயர்கல்வித் தகைமைகள் குறித்தோ, அக்கல்விப் பின்னணியின் சிறப்புகள் பற்றியோ புதிதாக எடுத்துரைக்க வேண்டிய அவசியமுமில்லை.

இந்த இடத்தில் சர்ச்சைக்குரிய பேசுபொருளாக உருவெடுத்திருப்பது பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் மற்றும் தற்போதைய யாழ் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகிய இருவரின் அணுகுமுறைகளும் நகர்வுகளும் மாத்திரமே.

ஏனெனில், வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள நான்கு மறைமாவட்டங்களின் ஆயர் நியமனங்கள் என்பது, வெறுமனே கத்தோலிக்க திருஅவையின் மதக் கோட்பாடுகளோடு மாத்திரம் சுருங்கிவிடுவதல்ல; அது சைவத் தமிழ் மக்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த ஈழத்தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளோடும் தேசிய இருப்போடும் பின்னிப் பிணைந்த ஒன்றாகவே இங்கு பொருள்முதல்வாத நோக்கில் அவதானிக்கப்பட வேண்டும்.



இந்த வரலாற்றுப் பின்னணியில் தான், யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் நியமன விவகாரம் சர்ச்சையாகியுள்ளது. கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் தமிழர் விரோத அரசியல் சூழ்ச்சிகளுக்கு, ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் துணை போகிறார் என்ற நியாயமான சந்தேகத்தின் அடிப்படையில், துணைப் பேராயர் அன்ரன் ரஞ்சித் யாழ் ஆயராக முன்னிறுத்தப்படும் நகர்வுக்கு எதிராக எதிர்ப்பும் எழுந்துள்ளது.

இந்த எதிர்ப்பானது தனிப்பட்ட ரீதியில் அன்ரன் ரஞ்சித் என்ற ஆளுமைக்கு எதிரானது அல்ல; மாறாக அதன் பின்னாலுள்ள அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு எதிரானது என்றே பொருள் கொள்ள முடியும்.

உண்மையைக் கூறினால், 2015ஆம் ஆண்டில் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் யாழ் மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்ட போதே, இதற்கான எதிர்ப்புக் குரல்கள் உள்ளுக்குள் ஒலிக்கவே செய்தன.

ஆயர் ஜஸ்ரின் “இலங்கை இராணுவத்தின் நண்பனா” என்று கேள்வி எழுப்பி நான் அப்போதே, விமர்சித்துக் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தேன். எனினும், போர்க்காலச் சூழலில் அவர் யாழ் மண்ணில் மக்களுடன் மக்களாக வாழ்ந்து, மறை பணியாற்றியவர் என்ற ஒரேயொரு காரணத்தைக் கருத்திற்கொண்டு, அருட்தந்தையர்கள் அன்று தமது எதிர்ப்புகளைப் பகிரங்கப்படுத்தாது தவிர்த்துக் கொண்டனர்.

கடந்த பத்தாண்டு கால அவரது பதவிக் கால நிர்வாக முறைமைகள் குறித்துப் பல அருட்தந்தையர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஆனால் கத்தோலிக்க திருஅவையின் மரபுவழி ஒழுக்கக் கட்டுப்பாடுகளுக்கும் விதிகளுக்கும் மதிப்பளித்து, அவர்கள் அதனை மிக நாகரிகமான முறையிலேயே சுட்டிக்காட்டியும் வந்துள்ளனர்.



ஒரு மறைமாவட்டத்தின் புதிய ஆயர் ஒருவர் பொறுப்பேற்கும் போது, ஓய்வுபெறும் ஆயர் தனது பதவிக்காலத்தின் நிதி நிர்வாக செயற்பாடுகள் அடங்கிய கணக்கறிக்கையை புதிய ஆயரிடம் மாத்திரமே நேரடியாகக் கையளிக்க வேண்டும் என்ற நடைமுறை கத்தோலிக்க திருஅவை விதிகளில் உண்டு.

இத்தகையதொரு பின்புலத்தில், ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசத்தின் பதவிக்காலமானது ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் சார்ந்து முற்றிலும் மௌனம் காக்கப் பயன்படுத்தப்பட்ட ஒன்றாகவே பார்க்கப்படுகிறது.

தமிழினத்தின் தேசிய உரிமைகள் குறித்து எவ்வித ஆக்கப்பூர்வமான கருத்துகளையும் முன்வைக்காத ஆயர் ஜஸ்ரின், இலங்கை இராணுவத்தோடு இணக்கமான உறவைப் பேணி, சில தேவாலயங்களை மீளக் கட்டியெழுப்பும் பணிகளிலேயே ஆர்வம் காட்டினார்.



இத்தகைய நகர்வுகள், அருட்தந்தையர்கள் மத்தியில் மட்டுமல்லாது, தமிழ் கத்தோலிக்க மக்கள் மத்தியிலும் அதிருப்திகளை தோற்றுவித்திருந்தது. ஆகவே, இந்த நீண்டகால அதிருப்திகளின் தொடர்ச்சியாகவும், கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் அரசியல் நகர்வுகளின் பின்புலத்தோடுமே, கொழும்பிலிருந்து அன்ரன் ரஞ்சித், யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக முன்னிறுத்தப்பட்ட விவகாரத்தில் வெடித்துள்ள எதிர்ப்புகளும் விசனங்களும் தர்க்கரீதியாக உற்று நோக்கப்பட வேண்டியுள்ளன.

ஆயர் அன்ரன் ரஞ்சித் அமைதியான இயல்பைக் கொண்டவர்; சமயப் பணிகளுக்கு அப்பால், ஈழத்தமிழர்களின் அரசியல் நகர்வுகளில் எவ்வித ஈடுபாடும் அற்றவர். கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் வழிகாட்டுதல்களை அப்படியே ஏற்றுச் செயலாற்றக்கூடிய ஒருவராகவே அவர் அறியப்படுகிறார். அத்துடன், ஓய்வுபெற்ற பின்னரும்கூட ஆயர் ஜஸ்ரின் பின்னணியில் இருந்து அன்ரன் ரஞ்சித்தை இயக்கக்கூடிய நிழல் சக்தியாக விளங்குவார் என்ற வாதங்களும் உண்டு.



எனவே, இப்பின்னணிகளின் அடிப்படையிலேயே ஆயர் அன்ரன் ரஞ்சித்தின் இந்த நியமனமானது, ”இலங்கை ஒற்றையாட்சி அரசு” என்ற அதிகாரக் கட்டமைப்பினால் திட்டமிடப்பட்டது என்ற ஆழமான, தர்க்கரீதியான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாலோசித்தே ஆயர் நியமனம் இறுதி செய்யப்பட்டதாக புதன்கிழமை, யாழ் ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற புதிய நியமனம் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு நிகழ்வில், ஆயர் ஜஸ்ரின் தெரிவித்திருக்கிறார்.

பொதுவாக, ஆயர் மற்றும் கர்தினால் நியமனங்களை மேற்கொள்வதற்கு அந்தந்த நாடுகளின் அரசியல் தலையீடுகளோ அல்லது அரசாங்கங்களின் அங்கீகாரமோ தேவையற்ற ஒன்றாகும்.

ஆகவே, அரசாங்கத்துடன் கலந்தாய்வு முன்னெடுக்கப்பட்டது என்று ஆயர் ஜஸ்ரின் குறிப்பிட்டதில் இருந்தே, இதன் பின்னால் இருந்த உள்ளக அரசியல் காய் நகர்த்தல் அம்பலமாகியுள்ளது.



மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்பின் மறைவிற்குப் பின்னர், ஈழத்தமிழர்களின் அரசியல் விவகாரங்கள் குறித்து ஐ நா போன்ற சர்வதேச அரங்குகளில் எந்தவொரு ஆயரும் குரலெழுப்பக் கூடாது என்பதில், சிங்கள அரசியல் தலைவர்களை விடவும், கர்தினால் மல்கம் ரஞ்சித் தீவிரமாக இருக்கிறார் என்பது பட்டவர்த்தனம்.

இறுதிப் போரின்போது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்குச் சர்வதேச நீதி விசாரணை தேவை

**தொடர்ச்சி: பக்கம் 14**




## தீபச்செல்வன்

உலகமெங்கும் மனிதனுக்கு நிலம் என்பது வெறும் சொத்தாகவன்றி, அவனது வாழ்வு நிகழ்கிற புலமாகிறது. தவிரவும் மனிதர்களின் வாழ்வில் நிலம் நினைவுகளின் முகவரியாகவும் அவனது முன்னோர்களின் காலடித் தடமாகவும் கொள்ளப்படுகிறது. இன்னொரு விதத்தில் அவனது பிள்ளைகளின் எதிர்காலமும் அந்த நிலம்தான். ஒரு இனத்தின் வரலாற்றை அழிக்க வேண்டுமானால், முதலில் அந்த இனத்தை அதன் நிலத்திலிருந்து அகற்றினாலே போதும். இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்களின் வரலாறு இதற்கு மிகப் பெரிய சாட்சியாக இருக்கிறது.




1988 ஆம் ஆண்டு வலி வடக்கில் வாழ்ந்த ஆயிரக் கணக்கான மக்கள் தமது சொந்த வீடுகளையும், ஆலயங்களையும், பாடசாலைகளையும் விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.ஒரு முழு சமூகமே தன் வேர்களிலிருந்து பிடுங்கி எறியப்பட்டது. அந்த நாளிலிருந்து இன்று வரை முப்பத்தேழு ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் அந்த மக்களின் வீடு திரும்பும் கனவு இன்றும் நிறைவேறாமல் தொடர்கிறது.



உண்மையில், இடப்பெயர்வு என்பது ஒரு நாளில் முடிந்துபோகிற விடயமல்ல. அது தலைமுறைகளைத் துரத்தும் ஒரு நெடுந் துயரம். தமது வீடுகளை விட்டு வெளியேறிய பெற்றோர் பலர் இன்றில்லை. அவர்கள் மீண்டும் தமது வாசலைக் காணாமல் உயிர் நீத்துவிட்டார்கள் என்பதை நினைத்துப் பார்க்க எவ்வளவு அதிர்ச்சியாக இருக்கிறது. அவர்கள் விதைத்த மரங்கள் இன்று வேறு கைகளின் நிழலை அளிக்கின்றன. அவர்கள் தோண்டிய கிணறுகள் வேறு முகங்களை பிரதிபலிக்கின்றன. அவர்கள் நடந்த பாதைகளில் இப்போது இராணுவ முகாம்களின் வேலிகள் எழுந்திருக்கின்றன. அவர்கள் இல்லாமல் ஆக்கப்பட்டமைக்கு இந்தப் போரும் இடப்பெயர்வும் ஆக்கிரமிப்பும்கூட காரணமல்லவா?

### இன்றும் நிகழ்கிற போராட்டம்

இன்றைக்கு 36 வருடங்கள் கடந்து வலி வடக்கு மக்கள் இன்னும் தமது நிலங்களை மீட்டுத்தருமாறு தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றனர். அண்மையில் யாழ் மாவட்ட செயலகம் முன்பு மாபெரும் போராட்டத்தையும் மக்கள் நடத்தினார்கள். அதில் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு ஆதரவு அளித்தார்கள்.



உண்மையில் இந்த மக்களின் போராட்டம் என்பது நினைவுகளால் செய்யப்படுகிற போராட்டம். தமக்குச் சொந்தமான மண்ணில் வாழும் உரிமையைத்தான் அந்த மக்கள் கேட்டுப் போராடுகின்றனர். ஆனால் அந்த எளிய உரிமைக்குக் கூட அவர்கள் பல தசாப்தங்களாகக் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பது தமிழ் மக்கள்மீது இலங்கைத் தீவில் தொடர்கிற ஒடுக்குமுறையை பாரபட்சத்தைக் காட்டுகிறது.



போர் முடிந்து பதினேழு ஆண்டுகளைக் கடந்த பின்னரும் வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு குறையவில்லை. குறிப்பாக வலி வடக்கின் பல பகுதிகளில் மக்களின் நிலங்கள் இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளன. பாதுகாப்பு என்ற பெயரில் மக்களின் வாழ்வுரிமை மறுக்கப்படுகிறது. மக்கள் தமது காணிகளைப் பார்க்கவே அனுமதி கேட்க வேண்டிய அவலம் தொடர்கிறது. சில இடங்களில் நிலங்கள் நிரந்தரமாக இராணுவத் தேவைகளுக்காக மாற்றப்பட்டுள்ளன. வேறு சில இடங்களில் சுற்றுலா, வர்த்தகம், பண்ணைகள் போன்ற பெயர்களில் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன.




### நிலத்தை பறிப்பதனால் வரும் வலி

நிலம் பறிக்கப்படும்போது வீடு மட்டும் இழக்கப்படுவதில்லை. வாழ்வாதாரமும் இழக்கப்படுகிறது. அதுவே இன்னமும் அதிர்ச்சியும் ஆபத்தும் அவலமுமாகும். விவசாயி தனது வயலை இழக்கிறான். மீனவன் தனது கடற்கரையை இழக்கிறான். மாணவன் தனது பள்ளியின் நினைவுகளை இழக்கிறான். வாழ்வாதாரம் மாத்திரமின்றி ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்களும் சிதைக்கப்படுகின்றன. ஆலயங்கள், மயானங்கள், மரபுவழி வாழ்விடங்கள் அனைத் தும் இராணுவ ஆக்கிரமிப்பினால் அழிக்கப்படுகின்றன.



இந்த நீண்ட இடப்பெயர்வு வலி வடக்கு மக்களின் பொருளாதாரத்தையும் சிதைத்தது. பல குடும்பங்கள் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும், தற்காலிக குடியிருப்புகளிலும் வாழ்க்கையைத் தொடர வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டனர். ஒரு தலைமுறை முழுவதும் வறுமையுடனும் நிச்சயமற்ற எதிர்காலத்துடனும் வளர்ந்தது. குழந்தைகள் தங்கள் சொந்த ஊரை வரைபடத்தில் மட்டுமே அறிந்த தலைமுறையாக மாறினர். அவர்களில் சில இளைஞர்கள் கண்ணீர் விட்டுப் பேசிய காணொளிகள்கூட அண்மையில் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தன.



வலி வடக்கு என்பது நிலத்திற்காக போராடுகிற ஓரிடம் மாத்திரமல்ல, அது நீதிக்காகக் காத்திருக்கும் ஒரு நினைவிடம். ஒரு பூர்வீக நிலத்தின் வரலாறு ஆழமாக பதிந்துள்ள பகுதியில் ஒவ்வொரு வீடும் தனி மனிதர்களின் வரலாற்றையன்றி இனத்தை வரலாற்றையல்லா பேசும். ஒவ்வொரு வீட்டுத் தளமும் ஒரு நிறைவேறாத கனவைப் பேசுகிறது. ஒவ்வொரு மரமும் அதன் உரிமையாளர்களின் வருகைக்காக இன்னும் காத்திருக்கிறது. இப்படியாக சனங்களின் நிலம் பற்றிய வலி நிலத்தின் ஒவ்வொரு கூறுகளிலும் படிந்திருக்கிறது என்பேன்.

### வாழ்வின் அரைநாள்

ஒரு நாட்டில் உண்மையான நல்லிணக்கம் வேண்டுமென்றால், முதலில் மக்களின் நிலங்களை அவர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். நீதியின்றி நல்லிணக்

தொடர்ச்சி: பக்கம் 15




# மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த சில காலங்களாகத் தீவிபத்துகள்: காரணம் என்ன?

மட்டு.நகரான்

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த சில காலங்களாக தீவிபத்துகள் அதிகரித்துவருவதை காணமுடிகின்றது.அண்மையில் மட்டக்களப்பு நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தினால் இரண்டு குழந்தைகள் உயிரிழந்திருந்த நிலையில் வாரத்திற்கு ஒரு தீச்சம்பவம் மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்றுவருவதை காணமுடிகின்றது.



கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக மையங்களில் ஒன்றாக மட்டக்களப்பு மாநகரப் பகுதி திகழ்கிறது. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சனத்தொகை, நகரமயமாக்கல் மற்றும் புதிய வணிக நிறுவனங்களின் வருகை காரணமாக மட்டக்களப்பு நகரின் பொருளாதார நடவடிக்கைகள் வேகமாக விரிவடைந்து வருகின்றன. இத்தகையதொரு சூழலில், நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மிக அவசியமான ஒன்றாகும். குறிப்பாக, மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் தீ பாதுகாப்பு முறைகளுடன் (Fire Safety Systems) அமைக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாக மாறியுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபை என்பது இலங்கையில் உள்ள மாநகரசபையில் மிகப்பழமையான மாநகரசபையாகவும் அதிகளவான இயற்கை அழகையும் வனப்புகளையும் கொண்ட பகுதி என்பதுடன் அதிகளவு வியாபாரம் ஈட்டும் சபையாக இருந்துவருகின்றது.மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 3500க்கும் அதிகமான வர்த்தக நிலையங்கள் காணப்படுகின்றன.



மட்டக்களப்பு மாநகரசபைக்கு பல்வேறு வழிகளிலும் வருமானம் ஈட்டும் ஒரு பகுதியாக வர்த்தக நிலையங்கள் அமைகின்றது.இந்த வர்த்தக நிலையங்களுக்கு அனுமதியளிக்கும்போது மாநகரசபையானது பல்வேறுபட்ட விடயங்களை கருத்தில்கொண்டே அனுமதிகள் வழங்கப்படுகின்றபோதிலும் கடந்த காலத்தில் இருந்த அரசியல் செல்வாக்குகள் மற்றும் இலஞ்ச,ஊழல் நிறைந்த நிர்வாக அலகுகள் காரணமாக இந்த அனுமதிகள் முறையற்ற வகையிலும் வழங்கப்பட்டு இருக்கின்றன.

மட்டக்களப்பு நகரின் பிரதான வீதி, பஜார் வீதி போன்ற பகுதிகளில் உள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் நெருக்கமாகவும், பழமையான கட்டட அமைப்புகளுடனும் காணப்படுகின்றன. முறையற்ற மின்சார இணைப்புக்கள், தரமற்ற மின்சார உபகரணங்களின் பயன்பாடு, எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களைக் குவித்து வைத்தல் மற்றும் போதிய காற்றோட்ட வசதியின்மை போன்ற காரணங்களால் தீ விபத்துக்கள் ஏற்படும் அபாயம் இங்கு அதிகமாக உள்ளது.

இப்பகுதியில் ஏதேனும் ஒரு கடையில் ஏற்படும் சிறு தீப்பொறி கூட, அருகில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களுக்கும் மிக வேகமாகப் பரவி, ஒட்டுமொத்த நகரையே முடக்கும் அளவிற்கான பாரிய பொருளாதார இழப்புகளையும் உயிர்ச்சேதங்களையும் ஏற்படுத்தக்கூடும்.
வர்த்தக நிலையங்களை தீ பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய திட்டமிட்டு அமைப்பது பின்வரும் காரணங்களுக்காக அவசியமாகிறது:



உயிர்ப் பாதுகாப்பு: கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்கள், அங்கு பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாப்பதே முதன்மையான நோக்கமாகும்.

பொருளாதாரப் பாதுகாப்பு: தீ விபத்துக்களால் வர்த்தகர்களின் வாழ்வாதாரம், பல மில்லியன் பெறுமதியான பொருட்கள் மற்றும் கட்டடங்கள் முற்றாக அழிந்து போவதைத் தடுக்க முடியும்.

அவசரகால மீட்புப்பணி எளிமை: தீ பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், விபத்து ஏற்படும் போது தீயணைப்புப் படையினர் விரைவாகச் செயற்பட வழியமைக்கும்.

கட்டடங்கள் அமைக்கப்படும் போதே முறையான பாதுகாப்பு வரைபடங்களின்படி அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொருவர்த்தகநிலையத்திலும்அவசரகாலத்தில்மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கென பிரத்தியேகமான அவசரக் கதவுகள் அமைக்கப்பட வேண்டும். இந்த வழிகள் எப்போதும் எவ்வித தடைகளுமின்றி திறந்த நிலையில் இருக்க வேண்டும் மற்றும் அவசர வழி என்பதைக் குறிக்கும் ஒளிரும் சுட்டிகள் பொருத்தப்பட வேண்டும்.




கட்டடத்தின் பரப்பளவு மற்றும் அங்குள்ள பொருட்களின் தன்மைக்கு ஏற்ப, போதிய எண்ணிக்கையிலான தீயணைப்பு உருளைகள் எளிதில் அணுகக்கூடிய இடங்களில் பொருத்தப்பட வேண்டும். மேலும், அவற்றை முறையாகப் பராமரிப்பதோடு, ஊழியர்களுக்கு அவற்றைப் பயன்படுத்தும் பயிற்சியும் வழங்கப்பட வேண்டும்.தீ பரவத் தொடங்கும் ஆரம்பக் கட்டத்திலேயே புகை மற்றும் வெப்பத்தை உணர்ந்து எச்சரிக்கை செய்யும் தானியங்கி அலாரங்கள் பொருத்தப்படுவது அவசியமாகும். இது பெரிய ஆபத்துக்களை முன்கூட்டியே தவிர்க்க உதவும். அங்கீகரிக்கப்பட்ட மின் பொறியியலாளர்களைக் கொண்டு, தரமான வயர்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தி மின் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும். சுமை அதிகரிப்பு மற்றும் மின்சுற்றுத் துண்டிப்பு ஏற்படுவதைத்

தடுக்கும் நவீன பாதுகாப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும். மட்டக்களப்பு நகரில் பெரும்பாலான இலத்திரனியல் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களிலும் இலத்திரனியல் பொருட்கள் திருத்தும் கடைகளிலும் முறையான தீயணைப்பு வசதிகளோ ஒரு தீ விபத்து ஏற்படும்போது அதனை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் வசதிகளோ இல்லாத நிலையிலேயே இந்த கட்டடங்களும் விற்பனை நிலையங்களும் காணப்படுகின்றன.




மட்டக்களப்பு மாநகரசபையானது புதிய வர்த்தகக் கட்டடங்களுக்கான அனுமதியை வழங்கும் போது, தீயணைப்புத் திணைக்களத்தின் பரிந்துரைகளையும் சான்றிதழ்களையும் கட்டாயமாக்க வேண்டும். தற்போது இயங்கி வரும் பழைய கட்டடங்களையும் அவ்வப்போது பரிசோதனைக்கு உட்படுத்தி, போதிய தீ பாதுகாப்பு வசதிகள் இல்லாத கடைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை அல்லது ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

வர்த்தகர்களும் தங்களின் சுய லாபத்தை மட்டும் கருதாது, தங்களது சொத்துக்களினதும், சமூகத்தினதும் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு மாநகரசபையின் தீ பாதுகாப்பு விதிமுறைகளை முழுமையாகப் பின்பற்ற முன்வர வேண்டும்.



மட்டக்களப்பு மாநகரசபையானது இந்த தீவிபத்துகளை தடுப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது.எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுத்தாலும் வர்த்தகர்களின் ஒத்துழைப்பும் அவர்களின் செயற்பாடுகளுமே முறையான பாதுகாப்பினை மட்டக்களப்பு மாநகரசபைக்கு வழங்கும்.

தொடர்ச்சி: பக்கம் 15



# தேயிலைச் சிறுதோட்டங்கள்: புள்ளிவிவரப் பொய்களும் மலையக யதார்த்தமும்

மருதன் ராம்

இலங்கை உலகப் புகழ்பெற்ற தேயிலை உற்பத்தி நாடாக அறியப்படுகிறது. “சிலோன் டீ” என்ற பெயர் உலக சந்தையில் இன்னும் மதிப்புடன் பேசப்படுகிறது. ஆனால், அந்தத் தேயிலையை உற்பத்தி செய்யும் சிறுதோட்ட விவசாயிகளின் வாழ்க்கையை மிக அவதானத்துடன் பார்த்தால், முற்றிலும் வேறுபட்ட ஒரு உண்மை வெளிப் படுகிறது.

| Table 1 - Corporate Estate / RPC Profitability (Selling Made Tea)- secondary data[2] | | | | | |
|---|---|---|---|---|---|
| Land Category | Annual Made Tea Yield (per Acre) | Average Colombo Auction Price (per kg) | Total Annual Revenue (per Acre) | Corporate COP (per Acre) | Net Annual Profit/Loss (per Acre) |
| Degraded / Neglected | 667 kg | Rs. 1,100 *(Lower quality grade)* | Rs. 733,700 | Rs. 800,400 *(at Rs. 1,200/kg)* | –Rs. 66,700 (Net Loss) |
| Modern National Average | 1,333 kg | Rs. 1,153 *(National Average)* | Rs. 1,536,949 | Rs. 1,390,319 *(at Rs. 1,043/kg)* | Rs. 146,630 |
| Optimal / Best Conditions | 2,667 kg | Rs. 1,250 *(Premium Orthodox grade)* | Rs. 3,333,750 | Rs. 2,533,650 *(at Rs. 950/kg)* | Rs. 800,100 |

[1] Table shows Rs. 330,000
[2] Data seems to be varied over various reports generated by the government and private institutions.

| Table 2 - Tea Smallholder Profitability (Selling Green Leaf) -- secondary data[3] | | | | | |
|---|---|---|---|---|---|
| Land Category | Monthly Yield (Green Leaf / Acre) | Annual Yield (Green Leaf / Acre) | Estimated Annual Revenue (per Acre) | Estimated COP (per Acre) | Net Annual Profit (per Acre) |
| Degraded / Neglected | 250 kg | 3,000 kg | Rs. 495,000 | Rs. 360,000 *(at Rs. 120/kg)* | Rs. 135,000 |
| Modern National Average | 500 kg | 6,000 kg | Rs. 990,000 | Rs. 660,000 *(at Rs. 110/kg)* | Rs. 330,000 |
| Optimal / Best Conditions | 1,000 kg | 12,000 kg | Rs. 1,980,000 | Rs. 1,080,000 *(at Rs. 90/kg)* | Rs. 900,000 |

[3] Data seems to be varied over various reports generated by the government and private institutions

அரசத் திணைக்களங்களும், தேயிலை ஆராய்ச்சி நிறுவனமும் வெளியிடும் உற்பத்திச் செலவுக் கணக்கு களை ஆராய்ந்தால், ஒரு ஏக்கர் தேயிலைத் தோட்டத்தில் இருந்து கிடைக்கும் ஆண்டு நிகர லாபம் மிகக் குறைவாக இருப்பதாகத் தெரிகிறது. இதைப் பார்த்தவுடன் இயல்பாகவே ஒரு கேள்வி எழுகிறது.

இவ்வளவு குறைந்த வருமானம் கிடைக்கும் தொழிலில் ஏன் இன்னும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தொடர்கிறார்கள்? இந்தக் கேள்விக்கான பதிலை அரச திணைக்களங்களால் வெளியிடப்படும் வெறும் லாப-நஷ்டக் கணக்குப் புத்தகங்களில் தேட முடியாது. கிராமப்புற வாழ்க்கை, குடும்ப உழைப்பு, தொடர்ச்சியான பணப்புழக்கம் மற்றும் பல தசாப்தங்களாக உருவான சந்தை அமைப்பு ஆகியவற்றை இணைத்துப் பார்த்தால்தான் உண்மையான விளக்கம் கிடைக்கும்.

தேயிலை உற்பத்திச் செலவைக் கணக்கிடும்போது, உரம், போக்குவரத்து, களை எடுப்பது, கொழுந்து பறிப்பது, கத்தரித்தல் போன்ற அனைத்துக்கும் சந்தை மதிப்பில் கூலி சேர்க்கப்படுகிறது. இது கணக்கியல் ரீதியில் சரியான அணுகுமுறையாகும். ஆனால் சிறுதோட்டங்களின் நிலை வேறு. அங்கு பெரும்பாலான வேலைகளை குடும்ப உறுப்பி னர்களே செய்கிறார்கள்.



கணவன், மனைவி, பிள்ளைகள் என அனை வரும் இணைந்து உழைக்கிறார்கள். அவர்கள் தங்களுக்குத் தனி யாக சம்பளம் வழங்கு வதில்லை. எனவே, பொருளாதார நிபுணர்கள் “செலவு” என்று கணக் கிடும் ஒரு பகுதி, விவசாயியின் பார்வையில் குடும்ப வருமானமாகவே மாறுகிறது. இதனால் காகிதத்தில் லாபம் குறைவாகத் தோன்றினாலும், அந்தப் பணம் குடும்பத்தின் அன்றாட வாழ்வாதாரத்தைத் தாங்குகிறது.



இதுவே அதிகாரப்பூர் வப் புள்ளி விவரங்களுக்கும் கிராமப்புற யதார்த்தத்திற்கும் இடையே காணப்படும் முதல் வேறுபாடாகும். குறிப்பாக தேயிலை அதிக லாபம் தரும் பயிராக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அதற்கு ஒரு மிகப் பெரிய பலம் இருக்கிறது. நிபுணர்களின் கூற்றுப்படி, அது தொடர்ச்சியான பணப்புழக்கத்தை வழங்கு கிறது. நெல், மிளகு, பட்டை, ஏலக்காய் போன்ற பயிர்களில் அறுவடை பெற பல மாதங் கள் காத்திருக்க வேண்டும்.

இடையில் குடும்பச் செலவுகள் தொடர்ந்து இருக் கும். ஆனால் தேயிலை ஆண்டெங்கும் ஒவ்வொரு ஏழு முதல் பத்து நாட்களுக்கும் கொழுந்து பறிக்கக்கூடிய

தொடர்ச்சி: பக்கம் 15




தமிழில்: **ஆர்த்திகன்**

நாற்பது அணிகள் ஏற்கனவே தங்கள் சொந்த மண்ணில் உள்ளன அல்லது அங்கு செல்லும் வழியில் உள்ளன. இதனால், 2026 ஃபிஃபா உலகக் கோப்பையில் கால்பந்தின் மிக உயரிய பரிசை வெல்வதற்காக அமெரிக்காவில் வெறும் எட்டு அணிகள் மட்டுமே போட்டியிடுகின்றன.



முதல் நான்கு இடங்களைப் பிடித்த அணிகளும் நூலிழையில் தகுதி பெற்றுவிட்டன. ஆனால், இந்தத் தொடரின் 104 போட்டிகளில் 100 போட்டிகள் முடிந்த பிறகு யார் களத்தில் நிற்பார்கள்?

### அட்லஸ் லயன்ஸ் பிரான்ஸை பழிவாங்கக் காத்திருக்கிறது

**காலிறுதி 1: பிரான்ஸ் vs மொராக்கோ – வியாழன், 20:00 GMT – பாஸ்டன், மாசசூசெட்ஸ்**

2022-ல் கத்தாரில் நடந்த அரையிறுதிப் போட்டியின் மிகவும் எதிர்பார்க்கப்பட்டும் மறுபோட்டியாக இது அமையும் என எதிர் பார்க்கப்பட்டது. முன்னர் நடப்புச் சாம்பியன்களால்மொராக் கோவின்கனவுப்பயணம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது போல இந்த முறையும் முடிந்ததது.




குரோஷியா மற்றும் பெல்ஜியம் இடம்பெற்ற குழுவில் முதலிடம் பிடித்தும், 16-வது சுற்றில் ஸ்பெயினை பெனால்டி முறையில் அதிர்ச்சிக்குள்ளாக்கியும், பின்னர் காலிறுதியில் போர்ச்சுகலை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியும், மொராக்கோ அணி மிகுந்த உத்வேகத்துடனும் நம்பிக்கையுடனும் இந்தப் போட்டிக்கு வந்தது. ஆனால், அதே சமயம் சோர்வுடனும் முக்கிய வீரர்களின் காயங்களுடனும் இருந்தது.

அப்போது அது ஒரு போனஸ் போட்டி போலத் தோன்றியது, ஆனால் வெறும் ஐந்து நிமிடங்களிலேயே அவர்கள் பின்தங்கியபோது, அவர்களின் கடினமான பணி ஒரு மலையை ஏறுவது போல ஆனது.

பாராட்டத்தக்க வகையில், அட்லஸ் லயன்ஸ் அணி சுதாரித்துக்கொண்டு, ஆட்டத்தில் 60 சதவீத பந்தை தங்கள் வசம் வைத்திருந்தது; பிரெஞ்சு அணியை விட அதிக கார்னர் வாய்ப்புகளைப் பெற்றது; கோலை நோக்கி 10 முறை ஷாட் அடித்தது மற்றும் கோல் கம்பத்தில் பந்தை அடித்தது. ஆனால், அந்த முயற்சிகளில் ஒன்று மட்டுமே இலக்கை நோக்கிச் சென்றது. ஆட்டம் முடிய 11 நிமிடங்கள் இருந்தபோது, பிரான்ஸ் ஒரு முக்கியமான இரண்டாவது கோலை அடித்து ஆட்டத்தை தங்கள் வசமாக்கியது.

நான்கு ஆண்டுகள் கழித்து, நிலைமை மிகவும் மாறிவிட்டது. 2022 அணியில் இருந்து ஒன்பது உறுப்பினர்கள் மட்டுமே இந்த ஆட்டத்தில் இடம்பெற்றனர். கடந்த முறை பிரான்சை எதிர்கொண்ட தொடக்க பதினொரு வீரர்களில் நான்கு பேர் மட்டுமே இந்த ஆண்டு 16-வது சுற்றில் கனடாவுக்கு எதிராக ஆடினர். மேலும், கத்தாரில் மொராக்கோவை வழிநடத்தி, ஜனவரியில் செனகலுக்கு எதிரான துரதிர்ஷ்டவசமான ஆப்பிரிக்க கோப்பை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்ற வாலித் ரெக்ராகுய் வெளி யேறிய பிறகு, மார்ச் மாதம் முகமது உவாபி தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.



32-வது சுற்றில், கூடுதல் நேரத்தில் சமன் செய்யும் கோலை அடித்து பெனால்டி ஷூட் அவுட்டில் நெதர்லாந்தை வீழ்த்திய பிறகு, மொராக்கோ அணி தனது கடைசி 16-வது சுற்றுப் போட்டியில் கனடாவுக்கு எதிராகக் கடுமையாகப் போராடியது. முதல் பாதியில் கடுமையான அழுத்தத்தைச் சமாளித்தோடு, நட்சத்திர முன்கள வீரர் இஸ்மாயில் சாய்பாரியையும் காயம் காரணமாக இழந்தது.

இருப்பினும், இரண்டாம் பாதியில், சிறப்பாகச் செயல்படுத்தப்பட்ட ஒரு செட் பீஸ் மூலம் சமநிலையை உடைத்து, பின்னர் இரண்டு அபாயகரமான எதிர் தாக்குதல் கோல்களை அடித்து 3-0 என்ற கணக்கில் வெற்றியை உறுதிசெய்து, தங்கள் துல்லியமான ஆட்டத்தை வெளிப் படுத்தினர்.

பிரான்ஸ் அணி, செனகலுக்கு எதிரான தனது தொடக்க ஆட்டத்தின் முதல் பாதியில் எதிர் தாக்குதலுக்கு எதிராகச் சிரமப்பட்டது, ஆனால் அதற்காகத் தண்டிக்கப் படவில்லை, அதன் பிறகு எல்லாம் சுமுகமாகவே சென்றது. அவர்கள் 3-1 என்ற கணக்கில் தொடக்க வெற்றியைப் பதிவு செய்தனர், அதைத் தொடர்ந்து ஈராக், பெரிதும் மாற்றப்பட்ட நார்வே, கடைசி 32 சுற்றில் ஸ்வீடன் ஆகியவற்றுக்கு எதிரான வெற்றிகளைப் பெற்றனர், பின்னர் கடைசி 16 சுற்றில் பராகுவேக்கு எதிராகக் கடைசி நிமிட பெனால்டி மூலம் ஒரு கடினமான வெற்றியைப் பெற்றனர்.



கனடாவுக்கு எதிரான ஆட்டத்தில் 21 நிமிடங்களுக்குப் பிறகு களமிறங்கிய சௌஃபியான் ரஹிமி, சாய் பாரிக்குப் பதிலாகத் திறமையாக விளையாடினார். பேயர்ன் முனிச் அணிக்குச் செல்லவிருக்கும் அந்த முன்கள வீரர், மொராக்கோவின் குழு ஆட்டங்கள் ஒவ்வொன்றிலும் கோல் அடித்தார். இருப்பினும், அவரும் அவரது அணியும் இன்னும் அதிக கோல்களை அடித்து, குழுவில் முதலிடம் பிடித்திருக்கக்கூடும்.

கிலியன் எம்பாப்பே, மைக்கேல் ஒலிஸ், உஸ்மான் டெம்பலே மற்றும் டெசயர் டூ அல்லது பிராட்லி பார்கோலா ஆகிய நால்வர் கூட்டணி சந்தேகத்திற்கு இடமின்றி உலகின் தலைசிறந்தவர்கள். மொராக்கோவின் நம்பிக்கைகள், அவர்களின் பாதுகாப்பு மற்றும் கோல்கீப்பர் யாசின் பூனு வலுவாக நிற்பதையும், அதே நேரத்தில் அவர்களின் முன்கள வீரர்கள் எதிர் தாக்குதலில் தங்களால் உருவாக்கக்கூடிய எந்தவொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்வதையும் முழுமையாகச் சார்ந்திருக்கும். ஆனால் மொறோக்கோ பிரான்ஸிடம் தோல்வி கண்டது.

### ஸ்பெயினின் தாராள மனப்பான்மையை பெல்ஜி யம் நம்பியிருக்க முடியாது

**காலிறுதி 2: ஸ்பெயின் vs பெல்ஜியம் – வெள்ளிக்கிழமை, 19:00 GMT – லாஸ் ஏஞ்சல்ஸ், கலிபோர்னியா**

தங்கள் குழு ஆட்டங்களின் தொடக்கத்திற்குப் பிறகு, பெல்ஜியம் காலிறுதிக்கு முன்னே றும் என்று பலர் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் என்று சொல்வது நியாயமே.



ரெட் டெவில்ஸ் அணி, எகிப்துக்கு எதிராகப் பின்தங்கிய நிலையில் இருந்து மீண்டு சமன் செய்தது. பின்னர் 10 வீரர்களுடன் ஈரானுடன் சமநிலையில் ஆடியது. போட்டியின் மிகக் குறைந்த தரவரிசை அணியான நியூசிலாந்தை வீழ்த்தி மட்டுமே தகுதி பெற்றது.

பின்னர், செனகலுக்கு எதிராக பெல்ஜியம் வெளி யேறும் நிலையை எதிர்கொண்டது. ஆட்டம் முடிய நான்கு நிமிடங்கள் இருந்தபோது 2-0 என்ற கோல் கணக்கில் பின்தங்கியிருந்தது. ஆனால், தடுப்பாட்டத்தில் ஏற்பட்ட சில குறைபாடுகளைப் பயன்படுத்தி ரொமேலு லுகாகு ஒரு கோலைத் திருப்பியடித்தார். பின்னர், கோல்கீப்பர் மோரி டியா ஒரு கிராஸைத் தவறவிட்டதைத் தொடர்ந்து, மூன்று நிமிடங்கள் கழித்து யூரி டைல்மேன்ஸ் தலையால் முட்டி ஒரு சமன் கோலை அடித்தார்.

கூடுதல் நேரம் முடிவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்பு, சர்ச்சைக்குரிய VAR முடிவுக்குப் பிறகு கிடைத்த பெனால்டி வாய்ப்பை டைல்மேன்ஸ் கோலாக மாற்றி, பெல்ஜியம் வெற்றியைத் தங்கள் பக்கம் திருப்பியது.

பின்னர், காலிறுதிக்கு முந்தைய சுற்றில் தட்டு மாற்றத் தில் இருந்த அமெரிக்க அணியை எதிர் கொண்டது அவர்களுக்குச் சாதகமாக அமைந்தது. ஃபோலரின் பலோகனின் தடையை ஃபிஃபா ரத்து செய்த கவனச் சிதறலுக்கு மத்தியிலும், மோசமான தடுப்பாட்டத்தைப்

தொடர்ச்சி: பக்கம் 16




தமிழில்: ஆர்தீகன்

வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (NATO) தனது மூன்றாவது காலகட்டத்தில் அடியெடுத்து வைக்கிறது. முக்கால் நூற்றாண்டுக்கு முன்பு இது நிறுவப்பட்டபோது, கம்யூனிசத்தின் பரவலைக் கட்டுப்படுத்துவதும் சோவியத் ஒன்றியத்தின் ராணுவ வலிமையை எதிர்கொள்வதுமே இதன் நோக்கமாக இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மேற்கு ஐரோப்பாவை முதலாளித்துவப் பாதையில் தக்கவைத்து, அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே இதன் நோக்கமாக இருந்தது. அக்காலத்தில் சோவியத் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் ஒருபுறம் இருக்க, நேட்டோ என்பது ஆக்கிரமிப்பு நோக்கங்கொண்ட அமைப்பாக அல்லாமல், தற்காப்பு நோக்கங்கொண்ட ஒரு கூட்டணியாகவே செயல்பட்டது. பனிப்போர் காலத்தின் அனைத்து நெருக்கடிகளையும் கடந்து அது உறுதியாக நிலைத்து நின்றது.



பனிப்போர் முடிவுக்கு வந்து சோவியத் ஒன்றியம் சிதைந்தபோது, நேட்டோ தான் நேரடியாகப் போராடிப் பெறாத ஒரு வெற்றியை அடைந்தது. தனது ஆரம்பகால நோக்கம் நிறைவேறிய பிறகும், அமெரிக்கத் தலைமையிலான இந்தக் ராணுவக் கூட்டணி கலைக்கப்பட மறுத்துவிட்டது. அதற்குப் பதிலாக, ஐரோப்பாவின் ஒரே பாதுகாப்பு அமைப்பாகத் திகழ அது முயன்றது. அது ஆக்கிரமிப்புப் பாதையைத் தேர்ந்தெடுத்து செர்பியாவுக்கு எதிராகப் போரிட்டது. ஆப்கானிஸ்தானில் போரிடுவதற்காகத் தனது வழக்கமான செயற்பாட்டு எல்லைக்கு அப்பாலும் (out of area) சென்றது. கிழக்கு ஐரோப்பாவில் இருந்த முன்னாள் சோவியத் சார்பு நாடுகளையும், சோவியத் ஒன்றியத்தின் முன்னாள் குடியரசுகள் சிலவற்றையும் தன்னுடன் இணைத்துக்கொள்ளும் வகையில் தனது எல்லையை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டது.



இருப்பினும், தனது முன்னாள் எதிரியான ரஷ்யாவுடனான உறவை நிர்வகிப்பதில் அது படுதோல்வி அடைந்தது. மாஸ்கோ விடுத்த உறுப்பினர் சேர்க்கைக்கான கோரிக்கையை அது நிராகரித்தது; அதற்குப் பதிலாக முன்வைத்த கூட்டுறவுத் திட்டம் அடிப்படையில் பயனற்றதாகவே அமைந்தது. ரஷ்ய எல்லை வரை தனது விரிவாக்கத்தைத் தொடர்ந்தது மற்றும் ஐரோப்பா முழுமைக்குமான பாதுகாப்பு ஏற்பாடு குறித்த மாஸ்கோவின் முன்மொழிவுகளை நிராகரித்தது ஆகியவற்றின் மூலம் ரஷ்யாவின் பாதுகாப்பு நலன்களை அது புறக்கணித்தது. தனது தேசியப் பாதுகாப்பிற்குப் பொறுத்துக்கொள்ள முடியாத அச்சுறுத்தலாக கிரெம்ளின் கருதிய 'நேட்டோவில் உக்ரைனின் உறுப்பினர் சேர்க்கை' விவகாரமே, தற்போது ஐந்தாவது ஆண்டாகத் தொடரும் உக்ரைன் போருக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

தொடர்ந்து நடைபெற்று வரும் இந்தப் போர் நேட்டோவிற்குப் புதிய உயிர்ப்பை அளித்துள்ளது. ரஷ்யா மீண்டும் ஒருமுறை எதிரியாக மாறியுள்ளது; அதே வேளையில், அதை எதிர்கொள்வதற்குத் தேவையான வலிமையையும் சாதகமான நிலையையும் மேற்கத்தியக் கூட்டணி இப்போது பெற்றுள்ளது. உக்ரைனைத் தனது பக்கம் கொண்டிருப்பதன் மூலம், ரஷ்யாவின் மீது நேரடி ராணுவத் தாக்குதலை நடத்த நேட்டோவால் முடியும். இந்தப் போரில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் நோக்கம், ஆரம்பத்திலிருந்தே பகிரங்கமாக அறிவிக்கப்பட்டபடி, "ரஷ்யாவிற்கு ஒரு மூலோபாயத் தோல்வியை (strategic defeat) ஏற்படுத்துவதே" ஆகும். பனிப்போர் காலத்தில் சாத்தியமற்றதாகக் கருதப்பட்ட ஒன்று, ரஷ்யாவுக்கு எதிரான மேற்கத்திய நாடுகளின் மறைமுகப் போரில் (proxy war) இப்போது சாத்தியமான ஒன்றாகக் கருதப்படுகிறது.




2025-ஆம் ஆண்டிலிருந்து, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் கொள்கைகள் நேட்டோவின் உள் கட்டமைப்பு மாற்றத்திற்கான செயல்முறையைத் தொடங்கி வைத்துள்ளன. ரஷ்யாவைக் "கையாள்வதற்கான" பொறுப்பு ஐரோப்பாவிற்கே உரியது என்பதை அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு உத்தி (US National Defense Strategy) தெளிவாகக் குறிப்பிடுகிறது. இவ்வாறு, வாஷிங்டன் தனது உலகளாவிய மூலோபாய முன்னுரிமைகளை மறுபரிசீலனை செய்வதால், கூட்டணியின் ஐரோப்பிய உறுப்பு நாடுகள் அதிக நிதி மற்றும் இராணுவச் சுமையை ஏற்கும்படி பணிக்கப்படுகின்றன. தற்போதைய போரின் சூழலில், இது மோதலில் மிகப் பெரிய ஈடுபாட்டைக் குறிக்கிறது. பாதுகாப்புச் செலவினங்களை அதிகரிக்க நீண்ட காலமாகத் தயக்கம் காட்டியும், போர்களில் இழுக்கப் படுவதற்கு அஞ்சியும் வந்த ஐரோப்பிய உயரடுக்குகள், தங்கள் மனதை மாற்றிக்கொண்டு, இந்தப் புதிய பொறுப்புகளையும் அபாயங்களையும் ஒரு வாய்ப்பாக ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அந்த மாற்றத்திற்குப் பின்னால் சில காரணங்கள் உள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தின் மந்தமான பொருளாதாரங்களை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கான ஒரு உந்து சக்தியாக இராணுவமயமாக்கல் இப்போது கருதப் படுகிறது. தனது நட்பு நாடுகளுக்கான கடமைகளை அமெரிக்கா குறைத்து வரும் சூழலில், இராணுவ ரீதியாக வலிமையான ஐரோப்பா, மூலோபாய ரீதியாக அதிக தன்னாட்சி கொண்டதாகத் திகழும். பல சவால்கள் பெருகிவரும் நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒரு இராணுவப் பரிமாணத்தைச் சேர்ப்பது அந்த ஒன்றியத்தை மேலும் வலுப்படுத்தக்கூடும். அரசியல் ரீதியாகப் பார்த்தால், "எதிரி வாசலில் வந்துவிட்டான்" என்ற சூழலில் மேற்கொள்ளப்படும் ஆயுதக் குவிப்பும் அணிதிரட்டலும், ஆளும் வர்க்கத்தினர் தங்கள் எதிர்ப்பாளர்களை "கிரெம்ளின் கைக்கூலிகள்" என்று முத்திரை குத்தி, தங்கள் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள எளிதாக்குகிறது. கருத்தியல் ரீதியாக, ரஷ்யாவை எதிர்த்துப் போராடுவது (தற்போதைக்கு உக்ரைன் வழியாக) ஐரோப்பாவை ஒன்றிணைக்கும் ஒரு புதிய கருத்தாக்கமாக மாறியுள்ளது.




ரஷ்யாவைப் பொறுத்தவரை, இந்த 'நேட்டோ 3.0' (NATO 3.0) என்பது, 1945-ல் நாஜி ஜெர்மனி மற்றும் அதன் கூட்டாளிகள் தோற்கடிக்கப்பட்ட பிறகு முதன்முறையாக, ஐரோப்பா மீண்டும் ரஷ்யாவின் தெளிவான மற்றும் உடனடி எதிரியாக மாறி வருகிறது என்பதையே குறிக்கிறது. ரஷ்யா மீதான அமெரிக்காவின் விரோதப் போக்கு குறித்து மாஸ்கோவில் உள்ளவர்களுக்கு எந்தவிதமான மாயையும் இல்லை; ஆனால் ரஷ்யாவுடனான மோதலில் வாஷிங்டன் இப்போது பின்னணியில் இருந்து வழிநடத்தும் ஒரு சக்தியாகவே உள்ளது. பனிப்போர் காலத்தில் நேட்டோ ரஷ்யர்களுக்கு "ஐரோப்பாவில் உள்ள அமெரிக்கா"வாகத் தோன்றியது; ஆனால் இப்போது அவர்கள் நேட்டோவைப் பார்க்கும்போது, அமெரிக்காவின் ஆதரவு பெற்ற ஐரோப்பாவையே காண்கிறார்கள்.



'நேட்டோ 3.0' மிகத் தீர்க்கமான இலக்குகளுடன் வெளிப்படையாகத் தாக்குதல் மனப்பான்மையைக் கொண்டுள்ளது. ரஷ்யா மீதான ஐரோப்பிய ஆளும் வர்க்கத்தின் உத்தி, பனிப்போர் காலத்தில் இருந்ததைப் போன்ற 'தடுப்பு நடவடிக்கை' (deterrence) மட்டுமல்ல; ரஷ்யாவை ஒரு பெரும் சக்தியாக இல்லாமல் அழிப்பதே அதன் இலக்கு. இதுதான் "மூலோபாயத் தோல்வி" (strategic defeat) என்பதன் உண்மையான பொருள். யூரேசியாவின் புவிசார் அரசியலில்

தொடர்ச்சி: பக்கம் 14

## நவாலிப் படுகொலை ... தொடர்ச்சி...

எனது நண்பர் ஒருவரின் மாமியும் காயங்கள் காரணமாக பின்னர் உயிரிழந்தவர்களுள் அடங்குவார்.

மறுநாளும் (1995,யூலை.10) அதேபோன்று அதிகமான குண்டுகள் வீசப்பட்டதாகவும் அதில் ஆகக் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரியவந்தது. குறித்த குண்டுகள் இலங்கை விமானப் படையினாலேயே வீசப்பட்டது. உயிர் இழந்தவர்களுக்கு வழங்கப்பட்ட மரணச் சான்றிதழ்களில் “வான்வழி குண்டுவீச்சினால் ஏற்பட்ட காயங்களினால் ஏற்பட்ட உயிரிழப்பு” என காரணம் குறிப்பிடப்பட்டுள்ளதன் மூலம் இலங்கை அரசின் இனப்படுகொலை மீளவும் உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் 1995 காலப்பகுதியில் எந்தவொரு வேறு ஆயுதக் குழுவும் வான்வழி குண்டுத்தாக்குதல் நடாத்தும் விமானங்களைக் கொண்டிருக்கவில்லை. என்பதால் இதனை சர்வதேசம் கவனத்தில் கொண்டிருந்தும் இதுவரை அதற்கான நீதி இல்லாத படுகொலையாகவே பத்தோடு பதினொன்று என்பதைப்போல் நவாலி படுகொலையும் உள்ளது.

நவாலி குண்டுவீச்சு சம்பவம் தொடர்பாக அன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கம் முதலில் இத்தாக்குதலை திட்டவட்டமாக மறுத்தது. எனினும், பின்னர் நிலைமையை உணர்ந்து இது குறித்து விசாரணைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தது. பல ஆண்டுகள் கழித்து, இந்தத் தாக்குதலை விமானப்படை “தவறுதலாக” மேற்கொண்டதாக அவர் ஒப்புக்கொண்டார்.

சந்திரிகா குமாரதுங்காவின் நிலைப்பாடு இச்சம்பவம் நடந்தபோது, அரசாங்கம் விமானப்படையின் தாக்குதலை முதலில் மறுத்ததுடன், சர்வதேச செஞ்சிலுவை சங்கம் இந்தத் தகவலை அரசாங்கத்திடம் முன்கூட்டியே கலந்தாலோசிக்காமல் உலக ஊடகங்களுக்கு வெளியிட்டது என்றும் விமர்சித்தது. தேவாலயம் அப்படியே இருப்பதாகவும், யாழ். ஆயரிடமிருந்து தகவல் எதிர்பார்க்கப்படுவதாகவும் அவரது நிர்வாகம் தெரிவித்தது.

தொடர்ந்து சர்வதேச அமைப்புகள் மற்றும் யாழ். பேராயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோர் அழுத்தங்களைக் கொடுத்ததை அடுத்து, அரசாங்கம் இந்தத் தாக்குதல் குறித்து விசாரணைகளை நடத்துவதாக உறுதியளித்தது.

இந்த இனப்படுகொலை நடந்து ஐந்து ஆண்டுகள் கழித்து 2000, ம் ஆண்டுதான் நவாலி தேவாலயம் மீது விமானப்படை குண்டு வீசியது ஒரு “தவறு” என்று சந்திரிகா குமாரதுங்காவால் ஒப்புக்கொள்ளப்பட்டது. “தேவாலயம் விமானப்படையின் இலக்காக இருக்கவில்லை” என்றும், “சம்பவம் குறித்து அறிந்தபோது விமானப்படையைக் கடுமையாகக் கண்டித்தேன்” என்றும் அவர் 2000, ம் ஆண்டில் குறிப்பிட்டிருந்தார்.

ஸ்ரீலங்கா நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்திய பின்னர் ஜனாதிபதிகளாக பதவி ஏற்றவர்கள் நிறைவேற்றிய முக்கிய இனப்படுகொலைகள்.

ரணசிங்க பிரமதாச பிரதமராக இருந்த

1. ஜூனியஸ் ரிச்சட் ஜயவர்தனா :1978 - 1989: வரை கொழும்பு, வெலிக்கடை இனப்படுகொலை, கொக்கட்டிச்சொலை இனப்படுகொலை.
2. ரணசிங்க பிரேமதாச 1989 - 1993, வரை வீரமுனை, சத்துருக்கொண்டான், வந்தாறுமூலை, மகிழடித்தீவு, இனப்படுகொலைகள் தொடக்கம் .சகல கிழக்குமாகாண இனப்படுகொலைகள்
3. டிங்கிரி பண்ட விஜேதுங்க 1993 - 1994, வரை சுண்டிக்குளம் இனப்படுகொலை
4. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 - 2005, வரை : செம்மணி இனப்படுகொலை. நவாலி தேவாலய இனப்படுகொலை.
5. மகிந்த ராஜபக்ச 2005 - 2015, வரை: தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் பலர், முள்ளிவாய்க்கால் இலட்சக்கணக்கானவர்கள் இனப்படுகொலை.
6. மைத்திரிபால சிறிசேன 2015 - 2019, வரை : ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் 265, பேர் உயிரிழப்பு.
7. கோத்தாபய ராஜபக்ச 2019 - 2022, வரை: அதிகரித்துவந்த கோவிட்-19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்தக் கோரியும், ஆரம்ப சுகாதார வசதிகளை வலியுறுத்தியும் மகரகம சிறை கைதிகள் மேற்கொண்ட போராட்டத்தின் மீது அதிகாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 8 கைதிகள் கொல்லப்பட்டதோடு பலர் படுகாயமடைந்தனர். காலிமுகத்திடல் அரகலிய போராட்டம்.
8. ரணில் விக்கிரமசிங்க 2022 - 2024, வரை: ரணில் விக்கிரமசிங்க காலி முகத்திடல் மற்றும் அலரி மாளிகை பகுதியில் அமைதியான முறையில் போராடிய மக்கள் மீது கடுமையான தாக்குதல்கள் நடத்தப்பட்டன.
9. அநுர குமார திசாநாயக்க 2024 தொடக்கம் தற்போது வரை : 2026, யூலை,05,06, நீர்கொழும்பு சிறையில் 27, படுகொலை.

2009, மே,18, க்கு பின்னர் இனப்படுகொலைகள் இடம் பெறாவிட்டாலும் திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு இன்று 2026, வரையும் 17, வருடங்களாக தொடர்கிறது.

• • •

## தொடரும் சிறை... தொடர்ச்சி...

போது, எந்தவொரு தடுப்புக் காவல் மையத்திற்கும் முன் அறிவிப்பின்றிச் சென்று சோதனையிடும் சட்டப்பூர்வ அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உள்ளது.

அதனைத் தடுத்ததன் மூலம், சிறைத்துறை எதனை மறைக்க முயல்கிறது என்ற கேள்வி எழுகிறது. இதன் காரணமாகவே, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகர் ஆகியோருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு தற்போது உத்தியோகபூர்வ அழைப்பாணை விடுத்துள்ளது.

மேலும் நாட்டின் தற்போதைய சூழலில் ஒட்டுமொத்த சிறைச்சாலை கட்டமைப்பும் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கக் கூடிய ஒரு எரிமலையாகவே இருந்து வந்துள்ளது என்பதை இந்த நீர்கொழும்பு சம்பவம் மீண்டும் நிரூபித்துள்ளது.

நாட்டின் ஒட்டுமொத்த சிறைச்சாலைகளின் உத்தியோகபூர்வ கொள்ளளவு வெறும் 11,000 முதல் 12,000 கைதிகளை மட்டுமே தங்கவைக்கக் கூடியதாகும். ஆனால், தற்போது 40,000 க்கும் அதிகமான கைதிகள் அனைத்து சிறைகளிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

இது அனுமதிக்கப்பட்ட அளவை விட 286சதவீதத்திற்கும் அதிகமான நெருக்கடியாகும். போதைப்பொருள் ஒழிப்பு என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் தற்காலிகக் கைது நடவடிக்கைகளால் சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றனவே தவிர, முறையான சீர்திருத்தங்கள் எதுவும் செய்யப்படுவதில்லை.

இந்நெருக்கடிக்குத் தீர்வாக, வரலாற்றுச் சிறப்பு மிக்க, 100வருடங்கள் பழமையான போகம்பரை சிறைச்சாலையை மீண்டும் திறக்க அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. இச்செயற்பாடானது ‘உடனடி உணவு’ சமைப்பது போன்றதொரு தற்காலிகமான தீர்வாகும்.

கடந்த 2014 ஆம் ஆண்டு கண்டி நகரின் கலாசார மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக, பல்லேகல பகுதிக்கு சிறைச்சாலை மாற்றப்பட்ட பின்னர், போகம்பரை நிலத்தில் பன்னோக்கு முதலீட்டுத் திட்டங்களை உருவாக்க நல்லாட்சி அரசாங்கத்தில் திட்டமிடப்பட்டது.

அதனை விடுத்து, மீண்டும் பில்லியன் கணக்கான வரிப்பணத்தைச் செலவழித்து பழைய சிறையைத் திறப்பது கண்டி மாவட்டத்தின் அபிவிருத்தியைப் பின்னோக்கித் தள்ளும் செயலாகும்.

சிறைச்சாலைகளின் நெருக்கடியைக் குறைக்க அரசாங்கம் புதிய சிறைகளை உருவாக்குவதை விடுத்து, சட்ட ரீதியான மாற்று வழிமுறைகளைக் கையாள வேண்டும். சிறைகளில் உள்ளவர்களில் 75 சதவீதமானோர் விளக்கமறியல் கைதிகளாவர்.

இவர்களில் பெரும்பாலோர் மிகச் சிறிய குற்றங்களுக்காக, சிறு தொகைப் பிணைப்பணத்தையோ அல்லது அபராதத்தையோ செலுத்த முடியாமல் சிறையில் வாடுபவர்கள். இவர்களுக்காக அரசாங்கம் ஒரு நாளைக்கு தலா 1,500 ரூபா வீதம் மில்லியன் கணக்கில் செலவிடுவதை விட, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளைப் போல ‘பிணை நிதியம்’ ஒன்றை உருவாக்குவது அவசியமாகும்.

மேலும், இலத்திரனியல் கண்காணிப்பு வளையங்களுடன் கூடிய ‘வீட்டுக்காவல்’ முறையை அறிமுகப்படுத்துவது அரசாங்கத்தின் நிதிச் சுமையைக் குறைப்பதுடன் சிறைகளின் நெரிசலையும் பெருமளவு கட்டுப்படுத்தும்.

இலங்கையில் 1983 ஜூலை 25இல் குட்டிமணி, தங்கத்துரையின் மரணத்திலிருந்து 2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை, 2020 ஆம் ஆண்டு மகர சிறைச்சாலை வன்முறை எனத் தொடரும் கறைபடிந்த வரலாற்றின் வரிசையில் இப்போது நீர்கொழும்பு சிறைச்சாலையும் இணைந்துள்ளது.

அரசாங்கம் வழமை போல மூவரடங்கிய விசாரணைக் குழுக்களை அமைப்பதோடு தனது கடமையை முடித்துக் கொள்ளக் கூடாது. நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இச்சம்பவத்திற்கு முழுப் பொறுப்பேற்றுள்ள நிலையில், துப்பாக்கிச் சூடு நடத்திய அதிகாரிகளின் பாதுகாப்பு, உளவுத்துறையின் பலவீனம் மற்றும் சிறைக்குள் நிலவும் ஊழல் ஆகியவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

சிறைச்சாலை என்பது பழிவாங்கும் நரகமல்ல. அது மனிதர்களைப் புனரமைக்கும் சீர்திருத்த மையம் என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும். ஐ.நா. வசிப்பிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே பிராஞ்ச் குறிப்பிட்டது போல, சுதந்திரம் பறிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனின் பாதுகாப்பும் அரசின் நேரடிப் பொறுப்பாகும்.

அரசாங்கம் இனியாவது தற்காலிகத் தீர்வுகளைத் தேடாமல், தசாப்தங்களாகக் கிடப்பிலுள்ள சிறைச்சாலை சீர்திருத்தப் பரிந்துரைகளை அரசாங்கம் உடனடியாகச் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். இல்லையெனில், நீர்கொழும்பு போன்ற கொடூரங்கள் எதிர்காலத்திலும் தொடர்வதைத் தடுக்க முடியாமல் போய்விடும் பேராபத்து நிறைந்திருக்கின்றது.

## பலாலி இராணுவ ... தொடர்ச்சி...

கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகின்றன. 2009 முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த 64,663 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் 692 ஏக்கர் காணிகளை விடுவித்ததாகவும் எதிர்வரும் ஓரிரு மாத காலப்பகுதியில் 243 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தத்தவில்லை. அத்தியாவசிய தேவை மற்றும் பாதுகாப்பு காரணிகளின் நிமித்தம் இந்த காணிகள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

பலாலி விமான நிலையம் 774.98 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் விமான நிலைய அபிவிருத்தி பணிகளுக்காக மேலதிகமாக காணிகள் தேவைப்படும் என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபையானது விமான படை ஊடாக பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளது.

காணி அமைச்சு, நில அளவைத் திணைக்களம், முப்படை மற்றும் பிரதேச செயலக பிரிவுகளை ஒன்றிணைந்து பொது கொள்கை அடிப்படையில் முரண்பாடற்ற வகையில் இந்த கோரிக்கைக்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளதாகவும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

## உலகின் பொருளாதார ... தொடர்ச்சி...

இது 2024-25 காலகட்டத்தின் சராசரி வளர்ச்சியான 3.5 சதவீதத்தை விடச் சற்று குறைவானதாகும்.

வாஷிங்டனைத் தலைமையிடமாகக் கொண்ட இந்த நிதி நிறுவனத்தின் கணிப்புப்படி, உலகளாவிய பணவீக்கம் இந்த ஆண்டு 4.7 சதவீதத்தை எட்டும் (2025-இல் இது 4.1 சதவீதமாக இருந்தது); பின்னர் 2027-இல் இது 3.9 சதவீதமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹார்முஸ் நீரிணையில் மூன்று வணிகக் கப்பல்கள் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து, செவ்வாய்க்கிழமையன்று ஈரான் மீது அமெரிக்கா மீண்டும் தாக்குதல்களை நடத்திய பின்னரும், ஆனால் புதன்கிழமையன்று ஈரானிய இலக்குகள் மீது அமெரிக்கப் படைகள் இரண்டாவது கட்ட குண்டுவீச்சுத் தாக்குதல்களைத் தொடங்குவதற்கு முன்னரும் IMF-இன் இந்தக் குறைப்பு அறிவிப்பு வெளியானது.

“எதிரெதிர் திசைகளில் செயல்படும் இரண்டு சக்திவாய்ந்த காரணிகளால் உலகளாவிய பொருளாதார நிலைமை வடிவமைக்கப்படுகிறது: மத்திய கிழக்குப் போரினால் ஏற்பட்ட எரிசக்தி விநியோகப் பாதிப்பின் நீடித்த விளைவுகள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த முதலீட்டு வளர்ச்சி ஆகியவை அவை,” என்று IMF-இன் ஆராய்ச்சிப் பிரிவின் துணை இயக்குநர் பெத்யா கோயேவா ப்ரூக்ஸ் (Petya Koeva Brooks) செய்தியாளர் சந்திப்பில் கூறினார்.

“இரவோடு இரவாக நடந்த நிகழ்வுகள், இந்த முன்னறிவிப்பைச்சுற்றியுள்ளநிச்சயமற்றதன்மையையும் அபாயங்களையும் எடுத்துக்காட்டுகின்றன,” என்று ப்ரூக்ஸ் கூறினார்.

## ஃபேஸ்புக் மற்றும்... தொடர்ச்சி...

தனது தளங்களை வேண்டுமென்றே வடிவமைத்ததாக கலிபோர்னியா, கொலராடோ, கென்டக்கி மற்றும் நியூ ஜெர்சி ஆகிய மாநிலங்கள் மெட்டா மீது குற்றம் சாட்டியுள்ளதாக, அந்நிறுவனம் திங்களன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் நடந்த நீதிமன்ற விசாரணையில், பாதிக்கப்பட்ட இளம் பயனர்களின் எண்ணிக்கையை மதிப்பிட்டு, மாநில சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட அபராதங்களைப் பயன்படுத்தி, முன்மொழியப்பட்ட அபராதங்களைக் கணக்கிட்டதாக அந்த நான்கு மாநிலங்களும் தெரிவித்தன. இழப்பீடுகளை எவ்வாறு கணக்கிட வேண்டும் என்பது குறித்த மாநிலங்களின் கோரிக்கைக்கு மெட்டா அளித்த சட்டப்பூர்வ பதிலில் இந்த 1.4 டிரில்லியன் டொலர் தொகை வெளியிடப்பட்டது.

இந்த மதிப்பீடு சட்டப்பூர்வமாக ஆதாரமற்றது எனக் கூறி மெட்டா அதை நிராகரித்துள்ளது. “நுகர்வோர் பாதுகாப்பு அமலாக்க வரலாற்றில் இவ்வளவு பெரிய அளவிலான ஒரு தண்டனைக்கு இணையானது எதுவும் இல்லை,” என்று அந்நிறுவனத்தின் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் எழுதியுள்ளதாக ராய்ட்டர்ஸ் மேற்கோள் காட்டியுள்ளது.

## கமேனியின் அஞ்சலி... தொடர்ச்சி...

கடந்த 6 நாட்கள் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் 35 மில்லியன் பேர் வரை பங்கேற்றுள்ளதாக மிப்பிடப்பட்டுள்ளது. இது, தெஹ்ரானில் மட்டும் 10.2 மில்லியன் மக்களை ஈர்த்ததும், வரலாற்றிலேயே மிகப்பெரிய இறுதி ஊர்வலத்திற்கான கின்னஸ் சாதனையைத் தன்வசம் வைத்திருப்பதுமான 1989-ஆம் ஆண்டு நடைபெற்ற கொமேனியின் இறுதி ஊர்வலத்தின் எண்ணிக்கையை முறியடித்துள்ளது.

## கர்தினால் மல்கம் ... தொடர்ச்சி...

யற்றது என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருந்த மல்கம் ரஞ்சித், 2019ஆம் ஆண்டு நிகழ்ந்த உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் விசாரணைகளுக்காகச் சர்வதேச நீதியைக் கோரியபோது, அவரின் இரட்டை முகம் பகிரங்கமாக வெளிச்சத்திற்கு வந்தது.

அதேநேரம், 'சி.எம்.ஆர்.எஸ்' (CMRS) எனப்படும் பிரதான கத்தோலிக்க துறவற பெரியவர்கள் மாநாடு (Conference of Major Religious Superiors) கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் சிங்கள அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் பெருமளவில் பங்கெடுத்திருந்தனர். அங்கு ஆரம்ப உரையாற்றியிருந்த ஆயர் ஜஸ்ரின்,"செம்மணி புதைகுழியில் சிங்கள மக்களும் புதைக்கப்பட்டிருக்கின்றனர்; தமிழர்கள் மாத்திரமே புதைக்கப்பட்டிருப்பதாகக் கூற முடியாது" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆகவே, தன் மனச்சாட்சிக்கு மாறாகப் பாரிய பொய்மையை வெளிப்படுத்திய பின்னணியைக் கொண்ட ஆயர் ஜஸ்ரின் மற்றும் அவ்வாறான பொய்களை ஏற்கனவே கட்டவிழ்த்து வரும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆகியோரின், விருப்பத் தெரிவான புதிய ஆயர் அன்ரன் ரஞ்சித், தமிழர் விவகாரத்தில் இந்த இருவரினதும் நிலைப்பாட்டை தொடர்ந்து முன்னெடுப்பார் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

ஆகவே, இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள். இரு மாதங்களுக்கு முன்னர், மன்னார் மறை மாவட்ட ஆயர் மற்றும் மன்னார் அருட்தந்தையர்கள் குறித்து சமூக வலைத்தளம் ஒன்றில் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அவதூறுகளுக்கு எதிராக நான் எழுதிய இரண்டு கட்டுரைகள் மிக முக்கியமானவை.

அதில் ஒரு கட்டுரை, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன் சஞ்சீவி' ஞாயிறு வார இதழிலும், மற்றைய கட்டுரை சமூக வலைத்தளங்களிலும் செய்தி இணையத் தளங்களிலும் வெளியாகியிருந்தன. அந்த இரு கட்டுரைகளின் வெளியீட்டிற்குப் பின்னர், அவதூறுகளைப் பரப்பியவர்கள் தங்களின் சமூக வலைத்தளப் பக்கங்களையே முடக்கிவிட்டனர்.

எனவே, "உண்மை" - "நியாயம்" என்பவற்றை சமரசமின்றி மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய ஒரு "பத்திரிகையாளனின்" சமூகப் பொறுப்புணர்வே, நான் எழுதும் கட்டுரைகள்.

வத்திக்கான் பொதுவாக எந்தவொரு புதிய ஆயரை நியமிப்பதற்கு முன்பும், அவர் அந்த நாட்டின் அல்லது குறிப்பிட்ட பிராந்தியத்தின் இன, மொழி, அரசியல் சூழலுக்குப் பொருத்தமானவரா, அனைத்து மக்களையும் சமமாக நடத்துவாரா என்பதை மிகத் தீவிரமாக உளவுத்துறை மற்றும் உள்ளூர் ஆலோசனைகள் மூலம் விசாரித்த பின்னரே இறுதி முடிவை வெளியிடுகிறது.

ஏதேனும் தவறான தகவல் காரணமாக நியமனம் செய்யப்பட்டு, பின்னர் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்-; திருஅவையின் ஒற்றுமைக்காக அந்த நியமனத்தை வத்திக்கான் உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்.

இது பற்றிய நெறிமுறைகள் வத்திகான் நியமன வரலாற்றுப் பதிவுகளில் உண்டு. கட்டுரையின் நீளம் கருதி அவற்றை சுருக்கமாகத் தருகிறேன். பிலிப்பைன்ஸ் நாட்டின் தாக்பிலாரன் (Tagbilaran) மறைமாவட்டத்தின் ஆயராக 2026 இல் நியமிக்கப்பட்ட அருட்தந்தையான சகோ (Fr. Saco), தனது ஆயர் திருநிலைப்பாட்டுக்கு சில வாரங்களுக்கு முன்னர் "ஆழ்ந்த பரிசுத்த ஆவியின் தேடலின் பின்" இந்த நியமனத்திலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

பராகுவே நாட்டின் ஆயர் மாரியோ மெலார்டினோ (Mario Melanio Medina), 2017 ஆம் ஆண்டு நீக்கப்பட்டார். ஆயர் ஜெரார்ட் பௌலார்ட் (Gerard Bouffard) 2002 இல் கனடாவின் ஒரு மறைமாவட்டத்திற்கு ஆயராக நியமிக்கப்பட்டார். ஆனால், முறைப்பாடுகள் எழுந்ததால், திருநிலைப்படுத்தப்படுவதற்கு முன்பே தனது நியமனத்தை வாபஸ் பெற்றார்.

இந்தோனேசியாவில், ஆயர் பாஸ்கலிஸ் புருனோ சியுகூர் (Bishop Paskalis Bruno Syukur) 2024 ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸினால், 'கர்தினால்' (Cardinal) என்ற மிக உயரிய பதவிக்கு நியமிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், மறைமாவட்ட நிர்வாகத்தின் முறைப்பாடுகளினால் அவர் கர்தினாலாக பொறுப்பேற்காமல் வாபஸ் பெற்றார். இவ்வாறு பதவியேற்றுப்புக்கு முன்னரே நீக்கப்பட்ட அல்லது தாமாகவே பதவி விலகிய பல உதாரணங்கள் உண்டு.

திருஅவையின் ஒற்றுமை, விசுவாசிகளின் நலன் மற்றும் நீதி ஒழுங்கு முறையைக் காப்பதற்காக, அறிவிக்கப்பட்ட ஆயர் நியமனங்களை வத்திக்கான் இரத்துச் செய்யவும், மாற்றியமைக்கவும் கத்தோலிக்க திருச்சபை முறைமைச் சட்டத்தில் (Canon Law) முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, சர்வதேச அளவிலான இத்தகைய வரலாற்று முன்னுதாரணங்களின் அடிப்படையில், கர்தினால் மல்கம் ரஞ்சித், யாழ் ஆயர் ஜஸ்ரின் ஆகியோரின் நிர்வாகச் செயற்பாடுகள் குறித்து, வத்திக்கானின் உயர் பீடத்திற்கு அருட்தந்தையர்களும் கத்தோலிக்கப் பொதுநிலையினரும் உரிய முறையில் தெளிவுபடுத்துவது அவசியமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, கத்தோலிக்கத் திருஅவையின் புனிதமான 'முறைமைச் சட்ட' வழிகாட்டுதல்களுக்கு மாறாக, தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை நீர்த்துப் போகச் செய்யும் வகையிலான கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் நுட்பமான நகர்வுகள், அதன் நீண்டகாலத் தாக்கங்கள் குறித்து, வத்திக்கானின் கவனத்திற்கு முறைப்படியாகக் கொண்டு செல்ல வேண்டியது தற்போதைய சூழலில் காலத்தின் தேவையாகும்.

**குறிப்பு - கர்தினால் - ஆயர் நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்ட ஆங்கிலச் செய்தி இணைப்புகள். பின் னூட்டத்தில் உள்ளன...**

• • •

## நேட்டோ 3.0-ன் ... தொடர்ச்சி...

ரஷ்யாவை ஒரு முக்கிய சக்தியாக இல்லாமல் ஒழித்துக்கட்ட ஐரோப்பியர்கள் கனவு காண்கிறார்கள்: அவர்களைப் பொறுத்தவரை, இது நீண்டகாலமாக அச்சுறுத்தி வந்த "ரஷ்யப் பிரச்சினை"க்கு ஒரு "இறுதித் தீர்வு" (final solution) காண்பதாக அமையும்.

உக்ரைன் போர்க்களத்தில் ரஷ்யாவின் முன்னேற்றங்களால் நீண்ட காலமாக அதிருப்தியில் இருந்த ஐரோப்பிய அரசியல்வாதிகளும் ஊடகங்களும் இப்போது வெற்றிக் களிப்பில் உள்ளனர்; ரஷ்யாவுக்குள் உள்ள இலக்குகளைத் தாக்க தாங்கள் வழங்கிய நீண்ட தூர ட்ரோன்கள் (drones), இந்தப் போரின் 'அதிசய ஆயுதம்' என்று அவர்கள் நம்புகிறார்கள். அதேபோல, நீண்ட தூரம் பாயும் குரூஸ் ஏவுகணைகள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகளை கீவ்வுக்கு (உக்ரைனுக்கு) வழங்குவதன் மூலம் தங்கள் தாக்குதல் திறனை வலுப்படுத்த அவர்கள் முயல்கின்றனர். இந்த ஆயுதங்கள் ரஷ்யாவின் தலைவிதியை ஒருமுறை மற்றும் நிரந்தரமாகத் தீர்மானிக்கும் என்று நம்பப்படுகிறது.

இருப்பினும், இது நடக்கப்போவதில்லை. ஐரோப்பிய சிந்தனையின் அடிப்படைக் குறைபாடு என்னவென்றால், ரஷ்யா தற்போது தன்னிடமுள்ள ஆயுதக் களஞ்சியத்தைப் பயன்படுத்துவதை விட, தோல்வி, சீரழிவு மற்றும் சிதைவை ஏற்றுக்கொள்வதையே விரும்பும் என்று அவர்கள் நம்புவதுதான். இந்த ஆயுதக் களஞ்சியம் அணு ஆயுதங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை, இருப்பினும் அவற்றை பயன்படுத்த வேண்டிய ஒரு நிலை வரக்கூடும். கிரெம்ளின், இதுவரை, தனது மிகவும் சக்திவாய்ந்த மரபுவழித் திறன்களைப் பயன்படுத்துவதிலோ அல்லது சில உயர் மதிப்புள்ள, அதிக கவனத்தை ஈர்க்கும் இலக்குகளைத் தாக்குவதிலோ மிகவும் நிதானமாக இருந்து வருகிறது. இத்தகைய நிதானத்திற்குப் பல விளக்கங்கள் உள்ளன, ஆனால் ரஷ்யத் தலைமையோ அல்லது ரஷ்ய மக்களோ எப்போதாவது நேட்டோவிடம் சரணடைவார்கள் என்று நம்புவது முட்டாள்தனமானது – உண்மையில், அது பேரழிவுக்கு வழிவகுக்கும்.

ஐரோப்பிய நேட்டோ தலைவர்களிடம் நவீன உத்திசார் கலாச்சாரம் பெருமளவில் இல்லாதது. கடந்த எட்டு தசாப்தங்களாகத் தங்கள் பாதுகாப்பை அமெரிக்காவிடம் ஒப்படைத்த பிறகு இது ஆச்சரியப்படுவதற்கில்லை. மற்றும் அவர்களின் கண்மூடித்தனமான ரஷ்ய வெறுப்பு, இது ஆழமாக வேரூன்றிய பழங்கால ஐரோப்பிய இனவெறி மற்றும் கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக ரஷ்யா மீது குவிக்கப்பட்ட உண்மையான அல்லது உணரப்பட்ட வன்மங்களின் விளைவாகும். ஐரோப்பாவை ரஷ்யாவுடன் ஒரு நேரடி மோதல் பாதையில் நிறுத்தியுள்ளது. நேட்டோ 3.0 என்றால் போர். ஒருவேளை அந்த நிலை வந்தால், நேட்டோ என்பதே இருக்காது.

**நன்றி:RUSSIA TODAY**

## நீர்கொழும்பு சிறைச்சாலை... தொடர்ச்சி...

அரசியல் கட்டமைப்புடனும் அணுகுவதாலேயே இலங்கையின் ஒட்டுமொத்த நிர்வாக கட்டமைப்பும் சீர்குலைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

கைதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருக்கு தற்போது அங்கு ஏற்பட்ட அநீதி நிலைக்கு அரசாங்கத்தின் மந்தகதியான போக்கே மிகமுக்கியமான காரணம் எனவும் சிறைச்சாலைக்குள் நிலவும் இக்கட்டான சூழ்நிலையை கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும் எனவும் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலமானது, ஒரு பொற்காலமாக அமையும் என்பதுதான் பெரும்பாலான மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக இருந்தது, ஆனால் இத்தகைய சம்பவங்கள் அந்த எதிர்பார்ப்பை பொய்த்துப் போக வைத்துள்ளன.

• • •






## தேயிலைச் சிறுதோட்ட ... தொடர்ச்சி...

பயிராகும். இதனால் வாரம் தோறும் அல்லது இருவாரத்திற்கு ஒருமுறை வருமானம் கிடைக்கிறது. இந்தப் பணத்தில்தான் உணவு பொருட்கள் வாங்கப்படுகின்றன.

குழந்தைகளின் பள்ளிச் செலவுகள் செலுத்தப்படுகின்றன. மருந்து வாங்கப்படுகிறது. மின்சாரக் கட்டணம் கட்டப்படுகிறது. ஒரு கிராமப்புறக் குடும்பத்திற்கு இது மிகப் பெரிய பாதுகாப்பாகும். அதனால்தான் பல விவசாயிகள் தேயிலையை “பணம் கொடுக்கும் பயிர்” என்று பார்க் கிறார்கள்.

குறிப்பாக, மிகச் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் ஒரு ஏக்கர் சிறுதோட்டத் தேயிலை நிலத்திலிருந்து கிடைக்கக்கூடிய அதிகபட்ச நிகரலாபம் ஆண்டொன்றுக்கு வெறும் 350,000 ரூபாயாக மட்டுமே உள்ளதாக அரச திணைக்களத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. அதாவது மாதத்திற்கு சராசரியாக 29,000 ரூபாய்.

இதே தேயிலை காணி சற்று தரம் குறைந்த நிலமாக இருந்தால், இந்த நிகர லாபத்தின் அளவு பூஜ்ஜியத்தை நோக்கியோ அல்லது கடுமையான நஷ்டத்தை நோக்கியோ வீழ்ந்து விடுகிறது என்றும் அவ்வாறான திணைக்களங்கள் கூறுகின்றன. இந்த தரவுகள் கள யதார்த்தத்துக்கு முற்றிலும் முரணாக இருக்கின்றன. குறிப்பாக தேயிலையைச் சுற்றி நூற்றாண்டு காலமாக ஒரு முழுமையான சந்தை அமைப்பு உருவாகியுள்ளது. கொழுந்து சேகரிக்கும் வாகனங்கள் கிராமங்களுக்கே வந்து விடுகின்றன.

அருகிலுள்ள தொழிற்சாலை கள் பறிக்கப்படும் கொழுந்தை வாங்கத் தயாராக உள்ளன. சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் சந்தையைத் தேடி அலைவதில்லை. ஆனால் வேறு பயிர் வளர்த்தால் நிலைமை மாறுகிறது. வாங்குபவரைத் தேட வேண்டும். போக்குவரத்துக்குச் செலவிட வேண்டும். சில நேரங்களில் விளைபொருள் விற்பனையாகாமலும் போகலாம். இதனால் அதிக லாபம் கிடைக்கும் என்றாலும், ஆபத்தும் அதிகரிக்கிறது. பல தேயிலைத் தோட்டங்கள் பல தலைமுறைகளாகத் தொடர்கின்றன.

அவற்றை முழுவதுமாக அகற்றி வேறு பயிரிட வேண்டுமெனில் பெரும் செலவு ஏற்படும். புதிய பயிர் விளைச்சல் தர பல ஆண்டுகள் ஆகலாம். எனவே பலர் தற்போதுள்ள தேயிலைத் தோட்டத்தையே பராமரித்து வாழ்வதைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இங்கே இன்னொரு முக்கியமான பிரச்சினையும் உள்ளது. தேசிய அளவில் “ஏக்கருக்கு சராசரி விளைச்சல்” என்ற ஒரு எண்ணிக்கை வெளியிடப்படுகிறது. ஆனால் எல்லா ஏக்கர்களும் ஒன்றுபோல இல்லை. சில தேயிலை தோட்டங்களில் ஆயிரக்கணக்கான ஆரோக்கியமான தேயிலை மரங்கள் இருக்கின்றன.

சில தோட்டங்களில் பாதிக்கும் மேற்பட்ட மரங்கள் அழிந்திருக்கலாம். மண் வளம், மழைப்பொழிவு, மரங்களின் வயது, பராமரிப்பு, உரமிடல், களை மேலாண்மை என பல காரணிகள் பறிக்கப்படும் கொழுந்தின் அளவை நிர்ணயிக்கின்றன. இவ்வளவு வேறுபாடுகள் இருக்கும் போது, எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு தேசிய சராசரியை வெளியிடுவது, கொள்கை முடிவுகளுக்கு போதுமான தகவலை வழங்காது. எனவே, தேயிலைத்துறைக்கு இன்று கூடுதல் மானியம் மட்டுமல்லாது துல்லியமான தரவுகளும் தேவைப்படுகின்றன.

ஒவ்வொரு பிராந்தியத்திலும் மண் வளம், காலநிலை, தேயிலையின் அடர்த்தி, பராமரிப்பு தரம், விளைச்சல் ஆகியவற்றை தனித்தனியாக மதிப்பிட வேண்டும். எந்தப் பகுதிக்கு மண் சீரமைப்பு தேவை? எங்கு புதிய நடுகை செய்ய வேண்டும்? எந்தப் பகுதிகளில் தொழில்நுட்ப ரீதியாக முதலீடு செய்தால் அதிக விளைச்சல் கிடைக்கும்? இவற்றை அறிவியல் அடிப்படையில் தீர்மானிக்காமல், எல்லோருக்கும் ஒரே மாதிரியான திட்டங்களை வழங்குவது பயனளிக்காது.

உர மானியம் அரசியல் விவாதமாக மாறுவது புதிதல்ல. ஆனால் மானியம் எல்லாக் காலத்திலும் ஒரே அளவில் வழங்கப்பட வேண்டுமா? என்பது முக்கியமான விடயமாக அமைகிறது. உலகச் சந்தையில் உர விலை குறைந்தால், மானியம் தேவைப்படாது. ஆனால் திடீரென விலை அதிகரித்து சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் செலவு தாங்க முடியாத அளவுக்கு உயர்ந்தால், அப்போது மட்டும் பாதுகாப்பு வழங்கும் அமைப்பு ஒன்றை உருவாக்கலாம்.

தேயிலை இன்று இலங்கையின் சிறுதோட்ட உரிமையாளர்களின் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. ஆனால் அது வெறும் உயிர்வாழ்வுக்கான பயிராகவே தொடர வேண்டுமா? அல்லது அதிக வருமானம் தரும், நவீன தொழில்நுட்பம் சார்ந்த, தரத்தை முன்னிலைப்படுத்தும் ஒரு போட்டித்திறன் கொண்ட தொழிலாக மாற வேண்டுமா? என்ற கேள்வி பிரதானமாக எழுகிறது.

இந்தக் கேள்விக்கான பதில் புதிய தரவுகள், அறிவியல் திட்டமிடல், சந்தை சார்ந்த கொள்கைகள் மற்றும் சிறுதோட்ட உரிமையாளர்களை மையமாகக் கொண்ட சீர்திருத்தங்களில் தான் தங்கி இருக்கிறது. தேயிலை ஒரு குடும்பத்தை ஒரே இரவில் செல்வந்தராக்கும் தொழிலாக கருத முடியாது. ஆனால் அது ஆயிரக்கணக்கான கிராமப்புறக் குடும்பங்களுக்கு வாரம் தோறும் பணப்புழக் கத்தை வழங்கும் ஒன்றாக இருக்கிறது. எனவே, தேயிலையை வெறும் லாப-நஷ்டக் கணக்குகளால் மட்டும் மதிப்பிட முடியாது.

அதே நேரத்தில், பழைய சராசரி புள்ளிவிவரங்களை மட்டுமே நம்பி எதிர்காலத்தை உருவாக்கவும் முடியாது. உண்மையான தரவுகள், அறிவியல் அடிப்படையிலான முடிவுகள், இலக்கு வைக்கப்பட்ட முதலீடுகள் மற்றும் சந்தை மாற்றங்களுக்கு ஏற்ப செயல்படும் கொள்கைகளே இலங்கைத் தேயிலைத்துறைக்கு புதிய உயிர் ஊட்டும். குறிப்பாக 200 ஆண்டுகளுக்கும் மேலாக காணி உரிமையற்றவர்களாக வாழும் மலையகப் பெருந்தோட்ட மக்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்ற வேண்டும் என்று கோரிக்கை கடந்த பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றன. அதற்காக மக்களை தயார்படுத்தும் பணிகளும் அரசு அதிகாரிகளை தெளிவூட்டும் பணிகளும் வெவ்வேறு அரசியல் கட்சிகள் சார்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறிருக்கையில், சிறு தேயிலைத் தோட்ட வருமானம் சார்ந்து வெளியிடப்படும் எதார்த்தமற்ற தரவுகள் மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கான எதிர்கால மாற்றத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

• • •

## நீர்கொழும்பு சிறைச்... தொடர்ச்சி...

படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்

இதேவேளை, நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகள், கைதிகள் மற்றும் அதிகாரிகளின் மரணங்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏனைய சிறைச்சாலைகளில் ஏற்பட்ட சம்பவங்கள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்ட கைதிகள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் மற்றும் சிறை அதிகாரிகளின் காவலில் இருந்தபோது இரு கைதிகள் மரணமடைந்தமைக்கான பின்னணி குறித்து ஆராய்ந்து வருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது. கைதிகள் இடமாற்றப்பட்ட சிறைச்சாலைகளுக்கு ஆணைக்குழு மேற்கொண்ட விஜயங்களின் போது, பல கைதிகள் காயமடைந்திருந்ததோடு அவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் தாமதிக்கப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சிகிச்சைத் தாமதங்கள் ஒரு பழிவாங்கும் நடவடிக்கையாக அமையலாம் என்று எச்சரித்துள்ள ஆணைக்குழு, அவர்களுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சையளிக்குமாறு பரிந்துரைத்துள்ளது.

மேலும், கடந்த 7ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட ஆணைக்குழு அதிகாரிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டமை ஆணைக்குழு சட்டத்தை மீறும் செயலாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒரு முக்கியமான தருணத்தில் அனுமதி மறுக்கப்பட்டமை குறித்து விசாரிப்பதற்காக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலையின் தலைமை சிறைச்சாலை அதிகாரி ஆகியோருக்கு ஆணைக்குழு தற்போது அழைப்பாணை விடுத்துள்ளது.

## தங்கள் வாழ்நில ... தொடர்ச்சி...

கம் இல்லை. உரிமையின்றி சமாதானமும் இல்லை. தமது சொந்த மண்ணில் வாழும் உரிமையை மறுக்கும் எந்த அரசியலும் ஜனநாயகத்தின் பெயரைச் சொல்ல முடியாது. இலங்கை அரசுகளில் பல ஜனாதிபதிகள் மாறி பல ஆட்சிகள் மாறினாலும் நில ஆக்கிரமிப்பிலும் அகதியாக அலைதலிலும் எந்த மாற்றமும் இல்லை.

முப்பத்தேழு ஆண்டுகள் என்பது ஒரு மனிதனின் அரை வாழ்நாள். அந்த அரை வாழ்நாளை அகதிகளாகக் கழித்த மக்களின் போராட்டத்தை எங்கள் துயரமான வரலாற்றில் எழுதுகிறோம். ஆனால் அதைவிட முக்கியமாக, அவர்கள் இன்னும் கைவிடாத நம்பிக்கையையும் இதன்போது சொல்லிவிட வேண்டும். ஏனெனில் ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நிலம் என்பது ஒரு பொருள் அல்ல. அது தலைமுறைகளின் உயிரால் பாதுகாக்கப்பட்ட வாழிடம்.

### கேப்பாபுலவு மக்களின் போராட்டம்

வலி வடக்கு மக்களின் நீண்டகால நில மீட்புப் போராட்டத்தைப் போலவே, முல்லைத்தீவு கேப்பாபுலவு மக்களும் தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இராணுவ முகாம் முன்பாக தொடர்ந்து போராடி வருகின்றனர். இன்று தமது நிலத்தைப் பெறுவதற்காக வெயிலிலும் மழையிலும் கேப்பாபுலவு மக்கள் போராட்டக் கூடாரங்களில் காத்திருக்கின்றனர். எங்கள் நிலம் எமக்கு வேண்டும் என்பதை உக்கிரமாகவும் உரத்துக் கேட்டு வருகின்றனர் அம் மக்கள். ஆனால் அவர்களின் உரிமைக் குரலுக்கு பதிலாக, இராணுவத்தின் அச்சுறுத்தலும் அரசின் மௌனமுமே தொடர்கின்றன.

வலி வடக்கும் கேப்பாபுலவும் இன்று வடக்கு கிழக்கில் நடக்கும் நிலத்திற்கான போராட்டத்தை உலகிற்கு சொல்கிற இரண்டு முக்கிய மையங்கள். கிழக்கில் மயிலத்தமடுவில் நிகழ்கிற ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தின் அடையாளமும்கூட. அவை தமிழர்களின் நில உரிமைக்கான தொடர்ச்சியான போராட்டத்தின் அடையாளங்களாக மாறியுள்ளன. மக்கள் தமது மண்ணை மீட்க அறவழியில் போராடிக்கொண்டிருக்க, இராணுவ ஆக்கிரமிப்பு இன்னும் இயல்பு நிலையாகப் பேணப்படுவது நீதியும் ஜனநாயகமும் நாட்டில் இருக்கிறதா என்பதையே கேட்கிறது. ஒரு மக்களின் நினைவுகளையும் வாழ்வாதாரத்தையும் அவர்களது நிலங்களிலிருந்து பிரித்து வைத்தபடி நல்லிணம் பேசுவது வேடிக்கையானது. நிலம் மக்களிடம் திரும்பும் நாளே உண்மையான நீதி தொடங்கும் நாளாகும்.

## மட்டக்களப்பு மாநகர... தொடர்ச்சி...

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட ஒரு தீயானது மிகபாரதூரமானதாக ஏற்பட்டால் அது முழு நகரினையும் அழிக்கும் நிலைக்கு செல்லும் நிலையே காணப்படுகின்றது. இதன் அபாயத்தன்மையினை உணரவேண்டும் என மாநகரசபையினால் தொடர்ச்சியான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் தீயணைப்பு கருவி கட்டாயமாக பொருத்தப்படவேண்டும். அவ்வாறு இல்லாத வர்த்தக நிலையங்களுக்கான வியாபார பதிவுகளை எதிர்வரும் ஆண்டுகளில் வழங்கப்போதில்லையென மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் சிவம்பாக்கியநாதன் அண்மையில் தெரிவித்திருந்தார்.



தீயணைப்பு கருவியை பொருத்தி இருக்கின்றபோது, உடனடியாக ஒரு தீ ஒன்று ஏற்படும் போது உடனடியாக நீங்கள் செயற்பட்டு அதனை அணைத்து முதல் நடவடிக்கையை நீங்கள் செய்து கொண்டு வருகிற நேரம் மாநகர சபையிலிருந்து எங்களுக்கு கிடைத்த அறிவுறுத்தல்களுக்கு அமைய ஐந்து தொடக்கம் 10 நிமிடத்திற்குள் எமது அந்த தீயணைப்பு பிரிவினர் அங்கே வந்து சேர்ந்து தொடர்ந்து அந்த தீயணைப்பை மேற்கொள்வதற்கு அது இலகுவாக இருக்கும்.

இல்லாவிடின் அந்த தீயணைப்பு மிகவும் பெரிதாகப் பரவி மிகவும் அதிக சேதத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு நிலைக்கு அது தள்ளப்பட்டிருக்கும். ஆகவே அதனைத் தடுக்கும் முகமாகத் தான் நாங்கள் அந்த தீயணைப்பு கருவியை கட்டாயம் நீங்கள் உங்களது ஒவ்வொரு கடைகளிலும் பொருத்த வேண்டும் என்கின்றதை நாங்கள் ஒரு கட்டளையாக உங்களுக்கு நாங்கள் வழங்குகின்றோம் எனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இந்த அறிவுறுத்தல்களை யார் இதுவரையில் பின்பற்றியுள்ளார்கள் என்று பார்த்தால் இதுவரையில் யாரும் அதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்கவில்லை. இந்த தீவிபத்து சம்பவங்களின்போது பொதுமக்களும் தமது கடமையினை சிறப்பாக முன்னெடுக்கவேண்டும்.

பொதுமக்கள் வர்த்தக நிலையங்களுக்குச் செல்லும்போது அவசரகால வழிகள் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும். தீ விபத்து ஏற்படும் பட்சத்தில் பதற்றமடையாமல், உடனடியாக தீயணைப்புப் பிரிவினருக்கு தகவல் வழங்குவதுடன், மீட்புப் பணிகளுக்குத் தடையாக இருக்காமல் ஒத்துழைக்க வேண்டும்.

“வருமுன் காப்பதே சிறந்தது” என்ற பழமொழிக்கு ஏற்ப, தீ விபத்துக்கள் ஏற்பட்ட பின் வருந்துவதை விட, அவை ஏற்படா வண்ணம் தடுப்பதே புத்திசாலித்தனமாகும். மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட வர்த்தகப் பகுதிகளைப் பாதுகாப்பானதாக மாற்றுவது வர்த்தகர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் கூட்டுப் பொறுப்பாகும். நாம் அனைவரும் நமது சமூகக் கடமையை உணர்ந்து செயலாற்றினால், மட்டக்களப்பின் பொருளாதார மையங்களைப் பாதுகாப்பதுடன், பெறுமதிமிக்க மனித உயிர்களையும் காக்க முடியும்.

• • •

## ஃபிஃபா உலகக் ... தொடர்ச்சி...

பயன்படுத்திக்கொண்டு 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, மூன்று ஆட்டங்களில் 12 கோல்களை அடித்தனர்.

இருப்பினும், அவர்களின் அதிர்ஷ்டம் முடிவுக்கு வரலாம், ஏனெனில் ஃபிஃபா உலகத் தரவரிசையில் மூன்றாம் இடத்தில் உள்ள ஸ்பெயினிடமிருந்து அதே போன்ற தாராள மனப்பான்மை அவர்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. ஸ்பெயின் அணி இந்தத் தொடரில் இதுவரை ஒரு கோல் கூட விட்டுக்கொடுக்காமல், ஒட்டுமொத்தமாக ஆறு உலகக் கோப்பை ஆட்டங்களில் கோல் எதுவும் வாங்காமல் வெற்றி பெற்றுள்ளது – இது வரலாற்றிலேயே மிக நீண்ட சாதனையாகும்.

லா ரோஜா அணி, தாங்கள் விளையாடிய ஐந்து போட்டிகளிலும், பாதி நேரத்திற்கு முன்பு இலக்கை நோக்கி இரண்டு ஷாட்களை மட்டுமே அனுமதித்துள்ளது. அந்த இரண்டு ஷாட்களும் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் போர்ச்சுகலுக்கு எதிராக 1-0 என்ற கோல் கணக்கில் பெற்ற கடினமான வெற்றியில் கிறிஸ்டியானோ ரொனால்டோவால் அடிக்கப்பட்டன. அந்த வெற்றியை மிகேல் மெரினோ கூடுதல் நேரத்தில் கோலாக மாற்றி வெற்றியை உறுதி செய்தார்.

ரெட் டெவில்ஸ் பயிற்சியாளர் ரூடி கார்சியா, அமெரிக்காவிற்கு எதிரான போட்டியில் தனது அணியில் மாற்றங்களைச் செய்தார்; பெல்ஜியம் அணி விளையாடிய 38 ஆட்டங்களில் முதல் முறையாக ஜெர்மி டோகுவை அணியிலிருந்து நீக்கியும், கெவின் டி ப்ரூய்னை மாற்று வீரராக அமர வைத்தும் இருந்தார். இருப்பினும், அவர்கள் தங்களின் புகழ்பெற்ற 1986 ஆம் ஆண்டு அணியைப் போலவே செயல்பட்டு, இந்த நிலையில் மீண்டும் ஐரோப்பிய சாம்பியன்களை வீழ்த்த வேண்டுமானால், அவர்களுக்குப் பல விஷயங்கள் சாதகமாக அமைய வேண்டும். எனினும் ஸ்பெயின் வெற்றிபெற்றுவிட்டுள்ளது.

### 'கோல்டன் பூட்' (Golden Boot) போட்டியில் மோதும் நட்சத்திர வீரர்கள்

**காலிறுதி 3: நார்வே vs இங்கிலாந்து – சனிக்கிழமை, 21:00 GMT – மியாமி, புளோரிடா**

இந்தத் தொடரில் முதல் முறையாக, 'கோல்டன் பூட்' விருதுக்கான முக்கிய போட்டியாளர்களான இருவர் ஒரே ஆடுகளத்தில் நேருக்கு நேர் மோதவுள்ளனர்.

நாக்-அவுட் சுற்றுக்கான தகுதி ஏற்கனவே உறுதியாகிவிட்ட நிலையில், பிரான்ஸ் மற்றும் கைலியன் எம்பாப்பேவுக்கு எதிரான ஆட்டத்தில் எர்லிங் ஹாலண்டை (Erling Haaland) பெஞ்சில் அமரவைத்ததன் மூலம், நார்வே பயிற்சியாளர் ஸ்டேல் சோல்பாக்கன் (Stale Solbakken) அந்த வாய்ப்பை குரூப் சுற்றிலேயே தடுத்திருந்தார். அதற்கு முந்தைய ஆட்டங்களில் ஈராக் மற்றும் செனகல் அணிகளுக்கு எதிராக தலா இரண்டு கோல்களை ஹாலண்ட் அடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வாய்ப்பை இழந்த குறையைத் தீர்க்கும் வகையில், ஐவரி கோஸ்ட்டுக்கு எதிரான முதல் நாக்-அவுட் ஆட்டத்தில் வெற்றிக்குரிய கோலை அடித்த ஹாலண்ட், பிரேசிலுக்கு எதிரான ஆட்டத்தில் இரண்டு கோல்களையும் அடித்து அணியை காலிறுதிக்கு அழைத்துச் சென்றார்.

நான்கு ஆட்டங்களில் அவர் அடித்த ஏழு கோல்களுடன் சேர்த்து, தொடர்ந்து 14 ஆட்டங்களில் கோல் அடித்துள்ளார்; அந்தத் தொடரில் மொத்தம் 27 கோல்களைக் குவித்துள்ளார். ஒட்டுமொத்தமாக 54 சர்வதேச ஆட்டங்களில் அவர் 62 கோல்களை அடித்துள்ளார்.

'கோல்டன் பூட்' போட்டியில் 25 வயதான ஹாலண்ட், லியோனல் மெஸ்ஸியை விட ஒரு கோல் பின்தங்கியும், இங்கிலாந்தின் ஹாரி கேனை விட ஒரு கோல் முன்னிலையிலும் உள்ளார்.

32 வயதான பேயர்ன் முனிச் (Bayern Munich) முன்கள வீரரான ஹாரி கேன், குரூப் சுற்றின் முதல் ஆட்டத்தில் குரோஷியாவுக்கு எதிராக இரண்டு கோல்களையும், பனாமாவுக்கு எதிரான ஆட்டத்தில் ஒரு கோலையும் அடித்தார்; அந்த வெற்றி அணியின் முதலிடத்தை உறுதி செய்தது. பின்னர், 'ரவுண்ட் ஆஃப் 32' சுற்றில் காங்கோ ஜனநாயகக் குடியரசுக்கு (DR Congo) எதிரான ஆட்டத்தில் இரண்டு கோல்களை அடித்து அணியை வெற்றிபெறச் செய்தார். மேலும், இணை-ஆயுர்வேத நாடான மெக்சிகோவுக்கு எதிரான விறுவிறுப்பான ஆட்டத்தில் (3-2 என்ற கணக்கில் வெற்றி), வெற்றிக்கு வழிவகுத்த பெனால்டி கோலையும் அவர் அடித்தார்.

ஜூலை மாத இறுதியில் ஒரு வார இடைவெளியில் பிறந்தவர்கள், இருவரும் தலா மூன்று முறை பிரீமியர் லீக் 'கோல்டன் பூட்' விருதை வென்றவர்கள் மற்றும் ஜெர்மனியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியவர்கள் என கேன் மற்றும் ஹாலண்ட் இடையே பல ஒற்றுமைகள் உள்ளன. இருப்பினும், 2022-2023 சீசனில் அவர்கள் இருவரும் இதுவரை இரண்டு முறை மட்டுமே ஒரே ஆடுகளத்தில் மோதியுள்ளனர். பிரீமியர் லீக்கில் டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் மற்றும் மான்செஸ்டர் சிட்டி அணிகள் மோதிய அந்த ஆட்டங்களில், தலா ஒரு வெற்றியையும் தலா ஒரு கோலையும் அவர்கள் பதிவு செய்தது குறிப்பிடத்தக்கது.

இதுவும் ஒரு கடுமையான போட்டியாகவே அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், மியாமியில் நடைபெறவுள்ள இந்த ஆட்டத்தில் இந்த நட்சத்திரங்களில் ஒருவர் வெற்றிபெற்றால், உலகின் மிகச்சிறந்த முன்கள வீரர் (striker) என்பதற்கான அவர்களின் தகுதி மேலும் வலுப்படும்.

### அர்ஜென்டினா மேலும் பரபரப்புகளைத் தவிர்க்க முடியுமா?

**காலிறுதிப் போட்டி 4: அர்ஜென்டினா vs சுவிட்சர்லாந்து – ஞாயிறு, 01:00 GMT – கேன்சஸ் சிட்டி, மிசூரி**

தோல்வியின் விளிம்பிலிருந்து மீண்டு வருவதுதான் சாம்பியன்களின் அடையாளம் என்பார்கள், ஆனால் நாக்-அவுட் சுற்றுகளில் கேப் வெர்டே மற்றும் எகிப்துக்கு எதிராக நம்பமுடியாத அளவிற்கு பரபரப்பான 3-2 வெற்றிகளுக்குப் பிறகு, லியோனல் மெஸ்ஸியும் அவரது அணியினரும் கேன்சஸ் சிட்டியில் சுவிட்சர்லாந்துக்கு எதிராக மிகவும் அமைதியான ஒரு இரவை எதிர்பார்ப்பார்கள்.

இரண்டு முறை சாம்பியன் பட்டம் வென்றவர்களும், நடப்பு சாம்பியன்களுமான அர்ஜென்டினா, எகிப்துக்கு எதிராக மிகவும் தடுமாறியது. ஆட்டம் முடிய 11 நிமிடங்கள் இருந்தபோது 2-0 என்ற கோல் கணக்கில் பின்தங்கியிருந்தது. எதிர் தாக்குதலில் அர்ஜென்டினா அடித்த மற்றொரு கோலை VAR ரத்து செய்யாமல் விட்டிருக்காவிட்டால், நிலைமை இன்னும் மோசமாக இருந்திருக்கும்.

சராசரியாக 30 வயது மற்றும் 173 நாட்கள் வயதுடைய அர்ஜென்டினா அணிக்கு எதிராக (இதுவரை உலகக் கோப்பை போட்டியில் அவர்கள் களமிறக்கிய இரண்டாவது வயதான அணி இதுவாகும்) எதிர் தாக்குதல்களின் போது, பக்கவாட்டில் ஹைசெம் ஹசனின் வேகம் மற்றும் பந்தை லாவகமாக கையாளும் திறனே எகிப்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

வெற்றியைத் தேடி அர்ஜென்டினா மீண்டும் முன்னேறிச் செல்லும் என்ற எதிர்பார்ப்புடன், கொலம்பியாவுடனான காலிறுதிக்கு முந்தைய சுற்றில் விளையாட முடியாமல் போன முழங்கால் காயத்திலிருந்து ஜோஹான் மன்சாம்பி மீண்டு வந்தால், சுவிட்சர்லாந்தும் அதே அச்சுறுத்தலை ஏற்படுத்த நம்புகிறது.

வேகமான 20 வயது வீரரான இவர், தனது கடந்த மூன்று ஆட்டங்களில் மூன்று கோல்களையும் ஒரு கோல் அடிக்க உதவியையும் செய்துள்ளார். அதே சமயம், கொலம்பியாவுக்கு எதிரான போட்டியில் மாற்று வீரராகக் களமிறங்கும் அளவுக்கு மட்டுமே உடற்தகுதியுடன் இருந்த மற்றொரு திறமையான விங்கரான ரூபன் வர்காஸ், இரண்டு கோல்களையும் ஒரு கோல் அடிக்க உதவியையும் செய்ததுடன், ஷூட் அவுட்டில் முக்கியமான பெனால்டியையும் கோலாக மாற்றியுள்ளார்.

அர்ஜென்டினாவுக்குச் சாதகமான ஒரு விஷயம் என்னவென்றால், சுவிட்சர்லாந்து தனது ஐந்து ஆட்டங்களையும் வட அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் விளையாடியுள்ளது; அவற்றில் கடந்த மூன்று ஆட்டங்கள் பிரிட்டிஷ் கொலம்பியாவின் வான்கூவரில் உள்ள a குழு ஆட்டங்களில் இரண்டை விளையாடிய அர்ஜென்டினா அணியை எதிர்கொள்ள மிசூரிக்குச் செல்கிறது.

இருப்பினும், 1954-க்குப் பிறகு முதல் முறையாகக் காலிறுதிக்கு முன்னேறி, கொலம்பியாவை வீழ்த்தித் தங்கள் முதல் உலகக் கோப்பை ஷூட் அவுட்டை வென்றிருப்பதால், வெற்றி பெறுவதற்கான எதிர்பார்ப்பு மிகவும் குறைவாக உள்ள இந்த ஆட்டத்தில் தங்களுக்கு ஒரு தடையற்ற வாய்ப்பு இருப்பதாக சுவிட்சர்லாந்து உணரக்கூடும்.

• • •


## சீக்கிய ஆர்வலர்... தொடர்ச்சி...

பேட்ரிக் கிராண்டி கூறினார்.

33 வயதான லாரன்ஸ் பிஷ்னோய் மற்றும் அவரது நண்பரான சதிந்தர்ஜீத் சிங் ஆகியோர், சீக்கியர்களுக்கான தனி நாடு கோரும் இயக்கத்தின் முக்கியச் செயல்பாட்டாளரான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலைக்குத் திட்டமிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். நிஜ்ஜார் 2023-ல் தான் தலைவராகப் பணியாற்றிய கோயிலுக்கு வெளியே சுட்டுக் கொல்லப்பட்டார். நிஜ்ஜாரின் மரணத்தில் இந்திய அரசுக்குத் தொடர்பு இருப்பதற்கான "நம்பகமான குற்றச்சாட்டுகள்" இருப்பதாக அப்போதைய கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியதைத் தொடர்ந்து, கனடா மற்றும் இந்திய அரசுகளுக்கு இடையே பதற்றம் ஏற்பட்டது. பிஷ்னோய் தற்போது காவலில் உள்ளார், ஆனால் சிங் இன்னும் கைது செய்யப்படவில்லை.









இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .

# சிறுவர் ஆக்கம்



- இ.ஜோயல் -
செல்வநாயகபுரம்

## பெண்ணுக்கு கல்வி வேண்டும்!

பெண்ணே நீ படி! புதுமை படைக்க படி!
உன்கையில் தான் நாளைய தலைமுறை
உள்ளது!
பள்ளி செல்! கல்லூரி செல்! வானம் தொடு!
வீட்டின் விளக்கே, நாட்டின் கண்ணே!

பயிலட்டும், உயரட்டும், வையம் புகழட்டும்!
அச்சமில்லை அச்சமில்லை என்று
சொல்லட்டும்
அறிவின் வாளை ஏந்தி முன்னே
செல்லட்டும்!

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு தேவை!
நாடோ வீடோ
எழுதுகோல் கொண்டு உலகை மாற்றட்டும்
ஏற்றம் பெறட்டும்
பெண்மை...

சு.திகழினி
கன்னியா



- ஜோ.ஜெனிபர் -
தேவாநகர்

## காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

பாடசாலையில் அருண் மற்றும் கார்த்திக் இருவரும் நல்ல விளையாட்டு வீரர்கள். ஒருநாள் தேசிய அளவிலான விளையாட்டு தேர்வுக்கான வாய்ப்பு வந்தது. பயிற்சியாளர் இருவரையும் கலந்துகொள்ள சொன்னார்.

அருண் அந்த வாய்ப்பை தவறவிடக் கூடாது என்று தினமும் கடுமையாக பயிற்சி செய்தான். தேர்வில் சிறப்பாக விளையாடி சான்றிதழ்களை பெற்றான். இதனால் அவனுக்கு நல்ல கல்லூரி சேர்கையும், வேலை வாய்ப்பும் கிடைத்தது.

ஆனால் கார்த்திக் அதை "பிறகு பார்க்கலாம்" என்று அலட்சியமாக இருந்துவிட்டான். பயிற்சிக்கு செல்லவில்லை. இதனால் அந்த வாய்ப்பை இழந்துவிட்டான். அதனால் அவனுக்கு கல்லூரி தேர்விற்கு புள்ளி காணாமல் , கூலி வேலைக்கு செல்கிறான்.

இவ்வாறு கிடைக்கும் நல்ல வாய்ப்புகளை அப்போதே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பின்னர் வருத்தப்பட நேரிடும். ஆகவே சந்தர்ப்பங்கள் கிடைக்கின்ற போதே பயன்படுத்தி கொள்வோம்.

பி.ஹர்சினி
பாலையூற்று

# தாயகமும் வாழ்வும்



